Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

National TAMIL DAILY

தேசிய தினசரி

போன் 389

தபாற் பெட்டி எண்: 47

மலர் 3 யாழ்ப்பாணம், பிலவ ஆடி 20 ஆம் நாள் ஸபர் 21 (4-8-61) வெள்ளிக்கிழமை இதழ் 146

நீங்கள் அணியும் ஆடைகள்
தூய வெண்மையாகத் திகழவேண்டுமானல்
இன்றே!
டொலர் அடையாளமிட்ட
நீலம் வாங்கி உபயோகியுங்கள்.
விநியோகஸ்தர்கள்:
டொலர் கோப்பரேஷன்
14, டாம் வீதி, கொழும்பு.

# எஸ். ஜே. வி.க்கு சத்திர

## சிகிச்சை வெற்றி
## தெம்புடன் தோன்றுகிறார்

லண்டன், ஆக. 3

**தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்துக்கு வெற்றிகரமாகச் சத்திர சிகிச்சை செய்யப்பட்டது. சத்திர சிகிச்சைக்குப் பின் அவர் தெம்புடன் காணப்படுகிறார்.**

நரம்பு வருத்தம் காரணமாக இலங்கையிலுள்ள அவரது டாக்டர்களின் ஆலோசனையின்மீது சத்திர சிகிச்சைக்காக லண்டன் வந்துசேர்ந்த திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் எடின்பரோ ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

நேற்று முன்தினம் அவருக்குச் சத்திர சிகிச்சை அளிக்கப்பட்டது. சத்திர சிகிச்சை வெற்றிகரமாக முடிவடைந்தது என்று டாக்டர்கள் தெரிவித்தனர். சிகிச்சைக்குப் பின் அவர் தெம்புடன் காணப்படுகிறார்.

பலர் ஆஸ்பத்திரிக்குச் சென்று அவரைப் பார்த்தனர். எவருடனும் அவர் அதிகம் பேசவில்லை. திரு. எஸ். ஜே. வி. பூரண சுகமடைய இன்னும் இரண்டு மாதங்கள் பிடிக்கும் எனத் தெரிய வருகிறது.



## பட்ஜட்டை இடதுசாரி கட்சிகள் ஆதரிக்க முடியாது

### சமசமாஜ தொழிற் சங்க தலைவர் கருத்து

கொழும்பு வியாழன்

லங்கா சமசமாஜக் கட்சியின் ஆதிக்கத்திலுள்ள இலங்கை தொழிலாளர் சம்மேளனம், அடுத்த வாரம் கூடி தொழிலாளரை புதிய வரி எவ்விதம் பாதிக்கிறதென்பதை விவாதிக்கும். பட்ஜட் சம்பந்தமாக சமசமாஜக்கட்சி வாக்களிக்கும் விஷயம் இதில் முடிவாகும்.

புதிய பட்ஜட், தொழிலாள வர்க்கத்தின் சகல பிரிவுகளையும் பாதித்திருப்பதால், எந்த இடதுசாரிக் கட்சியும் அதை ஆதரிக்க முடியாது என சமசமாஜக் கட்சியின் பிரபல தொழிற்சங்க வாதி ஒருவர் கூறினர்.

## ஸ்ரீராவ் தகனக்கிரியை

சென்னை, ஆகஸ்ட் 3

காலஞ்சென்ற சென்னை சட்டசபை சபாநாயகர் திரு. கிருஷ்ணராவின் சடலம் இன்று காலை எட்டரைமணிக்கு தகனம் செய்யப்பட்டது.

ராஜ்ய அரசாங்கத்தின் சார்பிலும், பல சமூக ஸ்தாபனங்களின் சார்பிலும் சடலத்தின் மீது மலர்வளையங்கள் வைக்கப்பட்டன. ராஜாஜி, சென்னை கவர்னர் ஸ்ரீமேதி, மேல்சபைத் தலைவர், மாஜி பிரதம நீதிபதி ராஜமன்னர் ஆகியோர் தகனக்கிரியையில் கலந்து கொண்டனர்.

<u>தார்பூச்சு வழக்கு தீர்ப்பு</u>

## ராஜரத்ன வரவில்லை

### 23-ந் திகதி ஆஜர் செய்ய உத்தரவு .

### 8 எதிரிகள் சிறை சென்றனர்

பதுளை, வியாழன்

தார்ப்பூச்சு வழக்கில் அப்பீல் நீதிமன்றம் அளித்த தீர்ப்பு, குற்றவாளிகளாகக் காணப்பட்ட எட்டுப் பேருக்கும் இன்று பதுளை மாவட்ட நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

எட்டு எதிரிகளும் பொலிஸ் காவலுடன் பதுளை சிறைச்சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

இதே வழக்கில் குற்றவாளியாகக் காணப்பட்ட வெலிமடை எம். பி. கே. எம். பி. ராஜரத்தின நீதிமன்றத்துக்கு வரவில்லை. ராஜரத்தினவின் பெயர் கூப்பிடப்பட்டது. திரு. ராஜரத்தின தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருப்பதால் இங்கு வரமுடியாது போய்விட்டது என்று பதுளை உதவி பொலிஸ் சுப்ரின்டென்ட் தெரிவித்தார்.

அப்பீல் நீதிமன்றத்தின் தீர்ப்பைத் தெரிவிப்பதற்கு ராஜரத்தினவை இம் மாதம் 23-ம் திகதி நீதிமன்றத்தில் ஆஜர் செய்யுமாறு பொலிஸ் அதிபருக்கு நீதிபதி உத்தரவிட்டார்.

**மக்கள் கூட்டம் திரண்டிருந்தது**

அப்பீல் நீதிமன்றம் அளித்த தீர்ப்பிற்கிணங்க குற்றவாளிகளாகக் காணப்பட்டவர்களுக்குத் தண்டனை அளிக்கப்படுவதைப் பார்ப்பதற்காக பெருந்திரளான மக்கள் இன்று மாவட்ட நீதிமன்றத்தின் உள்ளும் புறமும் திரண்டிருந்தனர். ஜனக்கூட்டத்தைச் சமாளிப்பதற்காக ஆயுதந் தரித்த பொலிசார் அங்கு காவல்புரிந்தனர்.

இந்த ஜனக்கூட்டத்துக்கிடையில் தம்பதெனியா எம். பி. திரு. ஆர். ஜி. சேனநாயகாவும் காலி எம். பி. திரு. டபிள்யு. தகநாயக்காவும் காணப்பட்டனர்.

**வழக்கு விபரம்**

சட்ட விரோதமாகக் கூட்டம் கூடியதாகவும் திரு. கிரி

(5ம் பக்கம் பார்க்க)

## கீழ் மாகாணத்தில் கான தூதர்

கொழும்பு, வியாழன்

இலங்கையிலுள்ள கான ஹைகமிஷன் திரு. எஸ். ஜி நிமாகோ, கீழ்மாகாணத்தில் விவசாய, கைத்தொழில் திட்டங்களைப் பார்வையிடும் பொருட்டு அங்கு சுற்றுப்பிரயாணம் செய்துவருகிறார். நாளை மட்டக்களப்பில் நடைபெறவிருக்கும் மத்திய கல்லூரி பரிசளிப்பு விழாவுக்கு அவர் தலைமை வகிப்பார். கல்லூரி அதிபர்களும் ஆசிரியர்களும் அளிக்கும் இராப் போஜன விருந்தில் பிரதம விருந்தினராகவும் அவர் கலந்துகொள்வார்.

## முத்துராஜவெலயில் நிலக்கரி

கொழும்பு, வியாழன்

முத்துராஜவெலப் பகுதியில் ஏராளமான நிலக்கரி இருப்பதாய்க் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாயும், இது சம்பந்தமாக ஆராயச் சோவியத் நிபுணர் கோஷ்டியொன்று வரவிருப்பதாயும் அறிவிக்கப்படுகிறது. லட்சக்கணக்கான டன் நிலக்கரி இப்பகுதியில் இருப்பதாய்க் கருதப்படுகிறது.

## திரு. ஜே. ஆர். விவாதத்தை ஆரம்பித்து வைப்பார்

### அடுத்த திங்கட்கிழமை பார்லிமெண்ட் கூடும்

கொழும்பு வியாழன்

வருகிற திங்கட்கிழமை காலை 10 மணிக்கு ஜனப்பிரதிநிதிகள் சபை கூடும்போது எதிர்க்கட்சியின் சார்பாக திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன விவாதத்தைத் துவக்கிவைப்பார். எதிர்க் கட்சியின் சார்பாக திரு. டட்லி சேனநாயக்காவும் அரசாங்கத்தின் சார்பாக நிதிமந்திரி திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவும் விவாதத்தை முடித்து வைப்பார்கள்.

ஒவ்வொரு நாளும் சபை அதிக நேரம் நடைபெற வேண்டுமா என்பதை அரசாங்கம் அடுத்த வாரம் முடிவு செய்யும்.

## "நீதி மசோதா சட்ட விரோதமானது"

### "பார்லிமெண்டில் பிரச்சினை கிளப்பப்படும்"

—திரு. ஜயவர்த்தன

கொழும்பு, வியாழன்

**1961-ம் ஆண்டுக்கான நிதி மசோதா எவ்வளவு தூரம் சட்டத்துக்கு அமைவானது என்னும் பிரச்சினையை ஐக்கிய தேசியக்கட்சி ஜனப் பிரதிநிதிகள் சபையில் கிளப்பும்**

கடந்தவாரம் இம்மசோதா பட்ஜெட்டுடன் நிதிமந்திரியால் சமர்ப்பிக்கப்பட்டது. ஐக்கிய தேசியக்கட்சியின் பாராளுமன்றக் குழு நேற்றுக்கூடியதாயும், இம்மசோதா சட்டவிரோதமானது என அது கருதியதாயும் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன கூறினர்.

பணம் சம்பந்தமான யோசனையை அதாவது இலங்கை வங்கி மசோதாவை மசோதாவில் சேர்ப்பது ஒழுங்கற்றது என்றும், வங்கி தேசியமயத்துக்கு தனிமசோதா கொண்டு வரப்பட வேண்டுமென்றும் அவர் கூறினர்.

## பட்டின சங்கம் நகரசபையாகும்

மாவிட்டபுரம், வெள்ளி

காங்கேசன்துறைப் பட்டின சங்கத்தை ஓர் நகரசபையின் அந்தஸ்துக்கு உயர்த்த ஸ்தல ஸ்தாபன இலாகா தீர்மானித்துள்ளது. இதை முன்னிட்டு காங்கேசன்துறை பட்டின சங்கத்தின் கருத்தைத் தெரிவிக்கும் படி ஸ்தலஸ்தாபன கமிஷனர் கேட்டுள்ளார்.

பட்டினசபையின் மாதாந்தக் கூட்டம் இம்மாதம் 16-ந் திகதி நடைபெறும்பொழுது இவ் விஷயம் பற்றி ஆலோசிக்கப் படுமெனத் தெரிகிறது.

காங்கேசன்துறைப் பட்டின சங்க அங்கத்தவர்கள் பட்டின சபை, நகரசபையாக மாறுகிறதைப் பெரிதும்விரும்புவதாகத்தெரிகிறது.

காங்கேசன்துறைப் பட்டின சங்கம் நகரசபையாக மாறினல் வடமாகாணத்தில் இந்த ஒரு நகரசபை தான் இருக்கும். வடமாகாணத்தில் இப்பொழுது வேறு நகரசபைகள் இல்லை.

## இந்திய ஜனதிபதி

புதுடில்லி, ஆக. 1

ஜனதிபதி ராஜன்பாபு சீராகக் குணமடைந்து வருகிறார். அவரது உணவு அதிகரிக்கப்பட்டுவருகிறது.




# அரசாங்க கட்சியை அவசரமாக கூட்டவும்?

## புதிய வரிகள்; பொரளை எம். பி. கோரிக்கை

கொழும்பு, வியாழன்

நிதிமந்திரி அறிவித்த புதிய வரி விகிதங்கள்பற்றி விவாதிப்பதற்கு அரசாங்க பார்லிமெண்டரிக்குழுவின் கூட்டத்தை அவசரமாகக் கூட்டும்படி பொரளை எம். பி. டாக்டர் டபிள்யு. டி. சில்வா அரசாங்க கட்சியின் பிரதம கொறடாவைக் கேட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

நாட்டுப்புற, நகரப்புற சாதாரண மக்கள்மீது விதிக்கப்பட்ட வரிகள் நீக்கப்படவேண்டுமென்றும், உணவுப்பொருள்களின் விலைகளை அதிகரிக்கக்கூடிய நடவடிக்கைகளைக் கைவிடவேண்டுமென்றும் கோரும் தீர்மானமொன்றை அரசாங்க கட்சிக்கூட்டத்தில் விவாதிப்பதற்காக டாக்டர் சில்வா சமர்ப்பித்துள்ளதாகவும் அறியப்படுகிறது.

வரவுசெலவுத் திட்டத்தில் துண்டுவிழும் தொகையை தேயிலை, ரப்பர் தோட்டங்கள், வர்த்தக ஸ்தாபனங்கள், வங்கிகள் ஆகியவற்றிலுள்ள அந்நிய சொத்துக்கள்மூலம் சரிக்கட்டலாமென்று டாக்டர் சில்வா யோசனை தெரிவித்திருப்பதாகவும் தெரியவருகிறது.

புதிய வரிகளினுல் அத்தியாவசிய உணவுப்பொருள்களின் விலைகள் உயர்ந்துள்ளதாகவும் இதனுல் கிராமப்புற மக்களும் நகரதொழிலாளர்களும் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளனரென்றும் டாக்டர் சில்வா சுட்டிக்காட்டியுள்ளதாகத் தெரிகிறது.

## "வாக்குறுதியை நிறைவேற்றுங்கள்"

உடுப்பிட்டி, வியாழன்

"எச். எஸ். ஸி. வகுப்பில் 15 மணி நேரம் கல்வி போதிக்கும் பண்டிதர்மாருக்கு, பட்டதாரிகளின் சம்பளம் வழங்கப்படுமென்ற அரசாங்கத்தின் வாக்குறுதியை நிறைவேற்றுமாறு, அகில இலங்கைப் பண்டிதர் சங்கமும், பயிற்றப்பட்ட ஆசிரியர் சங்கமும் கல்வி அமைச்சருக்கு விடுத்துள்ள் வேண்டுகோளில் கோரியுள்ளன.

சமீப காலத்தில் நடைபெற்ற மாற்றங்களின் விளைவாகச் சில தமிழ்ப் பண்டிதர்மார் எச். எஸ். ஸி. வகுப்பில் 15 மணி நேரத்துக்கு மேல் கல்வி போதிக்கின்றனரென்றும், அவர்களின் விஷயம் உடனடியாகக் கவனத்துக்கெடுக்க வேண்டுமென்றும் அவர்கள் கேட்டுள்ளனர்.

## குருஷ்சேவ் - இத்தாலி பிரதமர் சந்திப்பு

மாஸ்கோ, ஆக. 3

இத்தாலி பிரதம மந்திரியும் சோவியத் பிரதமர் குருஷ்சேவும் இன்று சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினர். நான்கு நாள் சுற்றுப்பிரயாணத்தில் இத்தாலியப் பிரதமர் சோவியத் யூனியனுக்கு வந்துள்ளார்

# 'சமசந்தர்ப்பம் அளிப்பதே அரசாங்கத்தின் நோக்கம்'

—மந்திரி

மத்துகாகம், புதன்

"இப்போது வெளியிடப்பட்டுள்ள வரவுசெலவுத் திட்டத்தை சந்தர்ப்பவாதிகளான அரசியல்வாதிகள் சிலர் வேண்டியமட்டும் விமர்சனம் செய்துகொள்ளலாம். ஆனல் 'ரோயல் கல்லூரி'யிலுள்ள கல்வி வசதிகள் போன்ற வசதிகளை மற்றைய கல்லூரிகளுக்குப் அளிப்பதற்காகவே வரவுசெலவுத் திட்டம் இவ்வாறு அமைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு கிராமத்திலும் ஒவ்வொரு ரோயல் கல்லூரி அமைப்பதே எமது குறிக்கோளாகும்."

இவ்வாறு மத்துகாமத்திலுள்ள துலுகல்லே மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற இல்லப்போட்டிகளின் முடிவில் பேசுகையில் தலஸ்தாபன வீடமைப்பு மந்திரி திரு. மகாநாம சமரவீரா கூறினர், அவர் மேலும் கூறியதாவது:-

"இலவசக்கல்வி வசதி இருந்தபோதிலும்கிராமங்களிலுள்ள பிள்ளைகளுக்கு பட்டினங்களில் வாழும் பிள்ளைகள் அனுபவிக்கும் வசதிகள் இல்லை. இந்த வசதிகளை அளித்து அதன்பயனைக் கிராமத்திலுள்ள பிள்ளைகளுக்கும் சமசந்தர்ப்பமளிப்பதே அரசாங்கத்தின் நோக்கமாகும். பள்ளிக்கூடங்களைத் தேசியமயமாக்கியது இந்தநோக்கத்தை நிறைவேற்றுவதற்கு வித்திட்டதுபோலாகும். சந்தர்ப்பவாதிகளையும் குதர்க்கவாதிகளையும் நம்பாதீர்கள். இவர்கள் நாட்டில் பிளவு ஏற்படுத்துபவர்களாவர். அரசாங்கம் மக்களது தேவைகள் யாவை என்பதுபற்றிப் பாராமுகமாக இருந்துவிடவில்லை. மக்களுக்கு வேண்டியவற்றை அறிந்து அவர்களை அவர்களுக்குரிய ஸ்தானத்தில் அமர்த்துவதற்கே அரசாங்கம் இருக்கிறது."

திரு. சமரவீரா விளையாட்டுப்போட்டிகளின் முடிவில் ப சில்களை வழங்கினர்.

## தந்தையின் கவலையீனம்

### மைந்தனை மாய்த்தது

பாணந்துறை

பண்டாரகமையைச் சேர்ந்த ஆர். விமலசேன பெரேரா என்னும் ஆறு மாதக் குழந்தை அபின் உட்கொண்டதால் மரணமாணமானர். குழந்தையின் தந்தை அபின் வில்லை ஒன்றை தாம் உண்ட பின்னர் அது சுற்றப்பட்டிருந்த காகிதத்தை வீசியிருந்தாராம். குழந்தை அபின் படிந்திருந்த காகிதத் துண்டை வாயில் போட்டு விழுங்கிவிட்டதாம். தந்தையார் காகிதத்தை பிள்ளையின் வாயிலிருந்து எடுத்துவிட முயற்சித்தபோது பிள்ளை அதனை விழுங்கிவிட்டது. பாணந்துறை ஆஸ்பத்திரிக்குக் குழந்தை எடுத்துச் செல்லப்பட்டது. ஆனல் அரைமணி நேரத்தில் அது இறந்துவிட்டது.

பாணந்துறை திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. எம். டி. எஸ். ஜயவர்த்தன மரண விசாரணை நடத்தியபோது விபத்தினுல் மரணம்விளைந்தது. எனத் தீர்ப்புக் கூறினர். தந்தையின் கவலையீனமே மைந்தனின் பரிதாப மரணத்திற்கு காரணமாகும் எனவும் அவர் கூறினர்.

## உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம். நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரு. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரு. 12-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்களடங்கிய கற்றலோக் (Catalogue) இனம்.

**வைத்தியர் பரிபூரணநந்தர்**
கைலாசபிள்ளையார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.

## கேள்வி விளம்பரம்

புலோப்பளைக் கிராமச் சங்க அக்கிராசனரால் கீழ் குறிக்கப்பட்டிருக்கும் ரோட்டு வேலைகளைச் செய்வதற்கு சீல் வைத்த கேள்விகள் பதிவுத் தபால் மூலம் ஆவணி மாதம் 14-ந் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரம் பெற விரும்புவோர் ரூபாய் 10,000க்கு குறையாமல் பதிவு உள்ளவர்களாய் இருத்தல் வேண்டும். ஒவ்வொரு வேலைக்கும் ரெண்டர் பிணையாக ரூபாய் 50-00 கட்டவேண்டும். கேள்விப் பத்திரப் பணமாக ரூபாய் 5-00 கட்டவேண்டும். இப்பணம் திருப்பிக்கொடுபட மாட்டாது. கேள்விப்பத்திரங்கள் 12-8-61 பகல் 12 மணி வரையும் வழங்கப்படும்.

வேலையின் விபரங்களை இக் கிராமச்சங்கக் கந்தோரில் அறிந்து கொள்ளலாம்.

**வேலையின் விபரம்**

1. முகாவில் ரோட்டு அமைத்தல், 2. மாசார் ரோட்டு அமைத்தல், 3. சென்ற் பேதுறு சேச் ரோட்டு, 4. தர்மக்கேணி தாளையடியில் கிணறு வெட்டிக்கட்டுதல்.

**ஏ. ஜி. ராஜசூரியர்**
பு. கி. ச. தலைவர்
புலோப்பளைக் கிராமச் சங்கம்,
பளை, 2-8-61.

## விற்பனைக்கு

பதிவிலுக்குக் கீழ் சொந்தக் குளத்துடன் இரு போகமும் நெல் செய்யக் கூடிய கமம் காட்டுத் தட்டாமலை முல்லைத்தீவு, நெடுங்கேணி உதயமலை முந்திரியக்குளத்துக்குக் கிட்ட உள்ள 22½ஏக்கர் கமம் உடனடியாக விற்பனைக்கிருக்கின்றது. விபரங்களுக்கு நேரில் வரவும். விவேகானந்தா றேட்ஸ் கோப்பறேஷன், 160, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

## ஆயுள்வேத அரிய சாதனை

புற்று நோய்க்கு 'யோகீஸ்வர ரசம்' தமிழ்வைத்தியமுறைப்படி புற்று நோயை வேரறுக்க முடியுமென்பதை செயல்மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது. மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டோர் எம்மிடம் சிகிச்சை பெற்றுக் குணமடைந்துளர். தாய்க்குலத்தாருக்கு ஒரு வரப்பிரசாதமாக கிடைத்துள்ள அரிய மருந்து **"பெரும்பாடு நிவாரணி."** தாமதமின்றிக் கலந்தாலோசியுங்கள்.

**பொ. செல்லையா**
ஆயுள்வேத வைத்தியர்,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

## தேவை

நன்கு ஸ்தாபிக்கப் பெற்ற இன்சூரன்ஸ் கம்பெனிக்கு காங்கேசன் துறைத் தொகுதி அடங்கிலும் பிரதிநிதிகள் தேவை. விபரங்கட்கு மனுச் செய்யவும்: ஸி. எஸ். பரராசசிங்கம், வெளிவேலைஅதிபர், அகில இலங்கை பெனிவிற் இன்சூரன்ஸ் கம்பெனி, பளை மேற்கு, தெல்லிப்பளை.

## கொழும்புத்துறை 'டிரான் போமர்'

யாழ்ப்பாணம், வெள்ளி

கொழும்புத்துறையில் அமைக்கப்படவிருக்கும் "டிரான் போமர்" சம்பந்தமாக முன்னர் அழைக்கப்பட்ட கேள்விப்பத்திரங்களை ரத்துச் செய்து புதிதாகச் கேள்விப் பத்திரங்களை அழைப்பதென யாழ்ப்பாணம் மாநகரசபை நிதிக்கமிட்டியின் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது. இக் கூட்டத்துக்கு சகல அங்கத்தவர்களையும் சமுகம் அளிக்குமபடி மேயர் கேட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. மின்சார என்ஜினியரும் இக் கூட்டத்தில் கலந்துகொண்டார்.

## இலங்கையில் ஆபாச நூல்கள்

### மூலப்பிரதிகள் ஆங்கிலம்

கொழும்பு, வியாழன்

"நூற்றுக்கணக்கான ஆபாச நூல்கள், ஆங்கிலத்திலிருந்து சிங்களத்திலும், தமிழிலும் மொழிபெயர்க்கப்பட்டு இலங்கையில் குறைந்த விலையில் விற்பனையாகின்றன" என்று டாக்டர் டபிள்யூ. பாலேந்திரா தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறியதாவது:- "ஆபாச நூல்கள் கொழும்பு நகரின் நடைபாதைகளிலும், கடைகளிலும் விற்பனையாகின்றன. இந்தியாவில் ஆபாச நூல்கள் பல தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு கள்ளத்தனமாக இலங்கையை வந்தடைகின்றன. அதுபோலவே சிங்களப் பதிப்புகள் இலங்கையில் மொழிபெயர்க்கப்படுகின்றன. இந்த ஆபாச நூல்களின் மூலப்பிரதிகள் அமெரிக்காவிலிருந்துதான் வெளியாகின்றன எனத் தெரிகின்றது."

## தொழில் விருப்பம் பற்றிய புள்ளி விபரம்

உடுப்பிட்டி, வியாழன்

1961-ம், 1962-ம், 1963-ம் ஆண்டுகளில் பாடசாலை விடும் மாணவர் எவ்வெத் தொழில்களை மேற்கொள்ள விரும்புகின்றனரென்றும், இதுவரை அவர்களுக்குப் பாடசாலைகளில் எவ்வளவு தூரம் தொழில் தகவல் கொடுக்கப்பட்டுள்ளதென்றும், கல்வி அமைச்சு புள்ளி விபரங்கள் சேகரித்து வருகிறது.

நாட்டில் தொழில் வழிகாட்டு முறையை விஸ்தரிப்பதற்கும், பெருகிவரும் வேலையில்லாத் திண்டாட்டத்தைக்குறைப்பதற்கும் அரசாங்கம் இம்முயற்சியை மேற்கொண்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

## வாதரவத்தையில் தண்ணீர் கஷ்டம்

கோப்பாய், வெள்ளி

புத்தூரிலிருந்து சுமார் மூன்று மைல்களுக்கப்பால் உள்ள வாதரவத்தை என்னும் கிராமத்தில் மக்கள் குடிதண்ணீர் இல்லாது மிகுந்த கஷ்டத்துக்குள்ளாகியிருக்கின்றனர். இது சம்பந்தமாக அவர்கள் வலி-கிழக்கு காரியாதிகாரி மூலம் அரசாங்க அதிபருக்கு ஓர் மகஜரை அனுப்பி வைத்துள்ளனர்.

வருடாவருடம் சித்திரை பங்குனி மாதங்களில் குடிதண்ணீர் விநியோகம் ஆரம்பிக்கப்பட்டு நடத்தப்படுவது வழக்கம். ஆனல் இவ்வாண்டு அவ்வாறு செய்யப்படவில்லை யாகையால் மக்கள் குடிதண்ணீரினுல் பெரிதும் கஷ்டப்படுகிருர்கள். வழக்கம்போல் குடிதண்ணீர் விநியோகத்தை உடனே ஆரம்பித்து உதவியளிக்கவேண்டும் என்று அம்மகஜரில் கோரப்பட்டுள்ளது.

## யாழ்ப்பாணத்தில் பிரிட்டிஷ் உதவி தூதர்

யாழ்ப்பாணம், வெள்ளி

பிரிட்டிஷ் உதவிக் ஹைக்கமிஷனர் திரு. டி. எஸ். குரொள்ற் ஹவாய்த் ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் வந்து நான்கு நாட்கள்வரை இங்கு தங்கிவிட்டு புதன்கிழமை கொழும்புக்குப் பிரயாணமானர்.

யாழ்ப்பாணப் பகுதியிலுள்ள கலாச்சார சம்பந்தமான இடங்களையும், புராதனப் பகுதிகளையும் அவர் பார்வையிட்டார். காங்கேசன்துறைச் சிமெந்துத் தொழிற்சாலை, நெடுந்தீவு ஆகிய இடங்களுக்கும் அவர் சென்று பார்வையிட்டார்.

திரு. ஹவாய்த் யாழ்ப்பாணம் உதவி அரசாங்க அதிபர் திரு. ஏ. டி. மூர்த்தியுடன் தங்கி அவருடன் இவ்விடங்களுக்கு விஜயஞ் செய்தார்.

## ஆசிரியருக்கு வெள்ளிவிழா

நாவலப்பிட்டி, புதன்

ஹட்டன் ஆசிரிய சங்கத் தலைவரும், நகரசபைஅங்கத்தவரும், சென். ஜோன்ஸ் பொஸ்கோஸ் கல்லூரியின் ஆசிரியருமான திரு. வி. வாமதேவனின் கடந்த இருபத்தைந்தாண்டு ஆசிரிய சேவையைப்பாராட்டி வெள்ளி விழா கொண்டாடப்பெற்றது. ஹட்டன் நகரப்பொதுமக்களும் கல்லூரி பழைய மாணவர்களும் இவ்வைபவத்தில் கலந்துகொண்டனர். கல்லூரி வளர்ச்சிக்கும் பிற்போக்கான நிலையில் உள்ள ஏழைக் குழந்தைகளின் கல்வி முன்னேற்றத்துக்கும் ஸ்ரீ வாமதேவன் ஆற்றிய தொண்டுகளையும் அவரது குண விசேடங்களையும் பலரும் பாராட்டிப் பேசினர். பழைய மாணவர்களால் பகல் போசன விருந்து அளிக்கப்பட்டதுடன் பாராட்டுப் பத்திரமும் வாசித்தளிக்கப்பட்டது.

## ஐ. நாவில் சீன

### அமெரிக்கா எதிர்க்கிறது

வாஷிங்டன், ஆக. 3

ஐ. நாவில் நவசீனவுக்கு அங்கத்துவமளிப்பதை அமெரிக்கா இன்னும் எதிர்க்கிறது.

அமெரிக்க ஜனதிபதி கென்னடியுடன் தேசிய சீன உதவி ஜனதிபதி திரு. சாங்சங் மூன்று தினங்கள் வாஷிங்டனில் பேச்சுவார்த்தை நடத்தியபின் வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில் இந்த விபரம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

லாவோஸ், கொரியா, வியட்நாம் குடியரசு, வெளிமங்கோலியா ஆகியவைகள் பற்றியும் இருவரும் பேச்சு வார்த்தை நடத்தியதாக அந்த அறிக்கை தெரிவிக்கிறது.

# டாக்டர் கிருஷ்ணராவ் காலமானர்

## தமிழ்நாடு சட்டசபை சபாநாயகர்

### "ஈடுசெய்யமுடியாத நஷ்டம்"

—திரு. வி. வி. கிரி

சென்னை, ஆக. 3

தமிழ் நாடு சட்டசபை சபாநாயகர் டாக்டர் யு. கிருஷ்ணராவ் இன்று அதிகாலையில் காலமானர்.

61 வயதான டாக்டர் கிருஷ்ணராவ் சிலகாலமாக நோய் வாய்ப்பட்டிருந்தார். சிலதினங்களாக அவர் நோய் அதிகரித்தது. இரண்டு மூன்று நாட்கள் பிரக்ஞையற்ற நிலையிலிருந்தார். மூக்கின் வழியாக தண்ணீர் பதார்த்தம் செலுத்தப்பட்டது.

டாக்டர் கிருஷ்ணராவின் மரணத்துக்கு அனுதாபம் தெரிவிக்குமுகமாக தமிழ் நாட்டின் அரசாங்க காரியாலயங்கள் இன்று மூடப்பட்டன. நாடெங்கும் தேசியக் கொடிகள் பாதிக் கம்பத்தில் பறக்க விடப்பட்டிருந்தன.

சென்னை நகரசபையில் இருபது வருடங்கள் அங்கத்துவம் வகித்த டாக்டர் கிருஷ்ணராவ் 1947—48-ம் வருடத்தில் நகரமேயராகவும் கடமையாற்றினர்.

1948-ம் வருடம் தமிழ்நாடு கீழ் சட்டசபைக்கு ஒரு அங்கத்தவராகத் தெரிவுசெய்யப்பெற்ற டாக்டர் கிருஷ்ணராவ் சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியின் மந்திரிசபையிலும் ஒரு மந்திரியாகப் பதவி வகித்தார். 1957-ம் ஆண்டில் மீண்டும் கீழ் சட்டசபைக்குத் தெரிவு செய்யப்பெற்ற இவர் சட்ட சபை சபாநாயகராகத் தெரிவு செய்யப்பெற்று பணியாற்றிவந்தார்.

இந்திய வைத்தியர் சங்கத்தலைவராகவும் பணியாற்றிய டாக்டர் கிருஷ்ணராவ் செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் பல பொதுஸ்தாபனங்களுடன் தொடர்புகொண்டிருந்தார்.

நாட்டின் இப்போதைய நிலையில் டாக்டர் கிருஷ்ணராவின் மறைவு ஈடுசெய்யமுடியாத பெருநஷ்டம்" என்று கேரள கவர்னர் திரு. வி. வி. கிரி டாக்டர் கிருஷ்ணராவின் மறைவு குறித்து வெளியிட்ட ஒரு அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

## இந்திய தலைநகரில் பேய்மழை

புதுடில்லி, ஆகஸ்ட் 2

டில்லியில் ஏற்பட்ட கடும் மழையின் காரணமாய் வீடுகள் பல இடிந்தன. நால்வர் மாண்டனர். 9 பேர் காயமடைந்தனர். விமான சேவை வழி மாற்றிச் செலுத்தப்பட்டது. புகையிரத போக்குவரத்தும் தடைப்பட்டது. கடந்த 70 வருடங்களில் இல்லாத அளவு பெருமழை பெய்ததாய் அறிவிக்கப்படுகிறது.

## ஏவாயுத தாக்குதலுக்கு பாதுகாப்பில்லை

வாஷிங்டன், ஆகஸ்ட் 2

அமெரிக்கா மீது ஏவாயுதத் தாக்குதல் நடந்தால் சரியான பாதுகாப்பு இல்லை என அமெரிக்க பாதுகாப்பு மந்திரி தெரிவித்ததாய்க் கூறப்படுகிறது. தற்போதைய பாதுகாப்பு ஒன்றரைக்கோடி மக்களுக்கே போதுமானது என்றும் அவர் கூறினராம்.

## 14 மீன்பிடியாளரை காணவில்லை

திருவனந்தபுரம், ஆக. 3

சென்ற செவ்வாய்க்கிழமை கொந்தளிக்கும் கடலில் மீன்பிடிக்கச்சென்ற 1100 பேர்களில் 14 பேர்களைக் காணவில்லையென்று அறிவிக்கப்படுகிறது. இவர்களைத் தேடிக் கண்டுபிடிப்பதில் கப்பல்களும் விமானங்களும் ஈடுபட்டுள்ளன. முதலில் 66 பேர்களைக் காணவில்லையென்று அறிவிக்கப்பட்டது.

## தமிழ்நாட்டுக்கு 3000 கிணறுகள்

சென்னை, ஆகஸ்ட்

நடப்பு ஆண்டில் தமிழ் நாட்டில் 3000 கிணறுகள் தோண்டப்படும். இதற்கு ரூ. 20,84,900 செலவாகும்.

# பாகிஸ்தானுக்கு அமெரிக்க ராணுவ உதவி

### கல்பிரெய்த் விளக்கம்

பம்பாய், ஆக. 3.

"பாக்கிஸ்தானுக்கு அமெரிக்க இராணுவ உதவி அதிகரிக்கப்பட்டுள்ளதென்ற பேச்சுக்கே இடமில்லை" என்று இந்தியாவிலுள்ள அமெரிக்க ஸ்தானிகர் பேராசிரியர் கல்பிரெயித் நேற்று பம்பாயில் பத்திரிகையாளர் சங்கத்தில் பேசுகையில் கூறினர்.

"பாக்கிஸ்தானுக்கு அமெரிக்கா கொடுக்கும் ஆயுதங்கள் இந்தியாவுக்கு எதிராக உபயோகப் படுத்தப்படமாட்டாவா?" என்ற ஒரு கேள்விக்கு ஸ்தானிகர் கல்பிரெயித் பதிலளிக்கையில் "இந்தியாவுக்கெதிராக அவைகளை பாக்கிஸ்தான் உபயோகிக்கமாட்டாது என்ற நம்பிக்கையின் பேரில்தான் கொடுக்கப்படுகிறது" என்று கூறினர்.

காஷ்மீர் பிரச்சனை சம்பந்தமாக இந்தியாவுக்கும் பாக்கிஸ்தானுக்குமிடையில் உபயோகமான முறையில் மத்தியஸ்தம் செய்ய முடியுமென்று அமெரிக்கா கருதவில்லையென்றும் பேராசிரியர் கல்பிரெயித் தெரிவித்தார்.

# யாழ்ப்பாண ஆஸ்பத்திரிக்கு மேலும் உதவித்தாதிகள்

### சுகாதார அதிகாரியிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரிக்கு இன்னும் 45 உதவித் தாதிமார்களை நியமிக்கும்படி சுகாதாரசேவை டைரக்டரைக் கேட்டுக்கொள்ளுவதென ஆஸ்பத்திரிச்சபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

டாக்டர் வி. டி. பசுபதி தலைமையில் இச்சபைக்கூட்டம் நடைபெற்றது.

ஆஸ்பத்திரியில் வேலைசெய்யும் தொழிலாளர்களில் சிறந்தவர்களுக்கு பரிசளிக்கவேண்டுமென்றதிட்டத்துக்குப்பதிலாக சமூக சேவையாளர்களைக் கொண்டு இவர்களுக்கு விரிவுரைகள் நிகழ்த்துவிப்பதென இச்சபை முடிவுசெய்துள்ளது.

இரண்டு புதிய 'அம்புலன்ஸ்'சைத் தந்துதவுமாறு சுகாதார டைரக்டரைக் கேட்டுக்கொள்ளுவதென இச்சபை முடிவு செய்துள்ளது.

வெளிநோயாளர் பகுதியில் ஒவ்வொருநாளும் சராசரி 1000 நோயாளர் வருகிறர்களென்றும் இவர்களைக் கவனிக்க போதிய வைத்திய உத்தியோகத்தர்கள் இல்லாதிருப்பதால் கூடுதலான வைத்திய உத்தியோகத்தர்களை இந்த ஆஸ்பத்திரியில் நியமிக்கும்படி சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கேட்டுக்கொள்ளுவதெனவும் முடிவு செய்யப்பட்டது.

தாய்மார் தங்குவதற்காக முன்னர் உபயோகிக்கப்பட்டு வந்த தங்குமிடத்தை, வராந்தையில் இருக்கும் காயக்காரர்கள் உபயோகிக்கக்கூடியதாக மாற்றவேண்டுமென்று திரு அப்துல்காதர் தெரிவித்தார். பலத்தகாயங்களுடன் வரும் நோயாளர்களுக்குக்கூட படுக்கைகள் கொடுக்கமறுக்கப்படுவதையும் அவர் சுட்டிக்காட்டினர். இவ்விஷயத்தை வைத்திய கூட்டுஆலோசனை உபசபைக்கு விடுவதென இக்கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டது.

## திருமதி பண்டிட்டுக்கு பிரிவுபசார விருந்து

லண்டன், ஆக. 3

லண்டனில் இந்திய தூதராகப் பணியாற்றி பதவிக்காலம் முடிவடைந்து தாயகம் திரும்பவிருக்கும் திருமதி விஜயலட்சுமி பண்டிட்டுக்கு பிரிட்டிஷ் அரசாங்கம் நேற்று பிரிவுபசார விருந்தளித்து கௌரவித்தது. இந்த விருந்தில் காலனி உறவு மந்திரி திரு டங்கன் சாண்டிஸ் பிரிட்டிஷ் வெளி விவகார மந்திரி ஹியூம் பிரபு, மவுண் பேர்ட்டன் பிரபு ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## பன்றிகளும் கழுதைகளும் மிகுந்துள்ளது சீன

ரோம், ஆகஸ்ட் 3

உலகிலுள்ள மற்றைய எல்லா விலங்குகளுடன் ஒப்பிடுகையில் ஆடுகள்தான் மிகவும் அதிக எண்ணிக்கையில் இருப்பதாக கணக்கிடப்பட்டுள்ளது, 1958 — 59-ம் வருட சர்வதேச உணவு விவசாய ஸ்தாபன புள்ளி விபரத்தின்படி உலகம் முழுவதும் 56·8 கோடி ஆடுகள் இருப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

உலகிலேயே அதிகமான பன்றிகள் கம்யூனிஸ்ட் சீனவில்தான் உள்ளன. மொத்தம் 16 கோடி பன்றிகள் இங்கு இருப்பதாக கணக்கிடப்பட்டுள்ளது. அதேபோல அதிக கழுதைகளும் சீனவில்தான் இருக்கின்றனவாம். சுமார் 1·11 கோடி கழுதைகள் சீனவில் இருக்கின்றன.

# பிஸர்ட்டா நிலைமை பற்றிய விவாதம்

## ஐ. நா. பொதுச்சபையின் அவசரக் கூட்டம்

நியுயோர்க், ஆக. 3.

பிஸர்ட்டா நிலைமை பற்றி விவாதிப்பதற்காக ஐ. நா. பொதுச்சபையின் அவசரக் கூட்டம் திங்கட்கிழமை நடைபெறலாமென எதிர் பார்க்கப்படுகிறது.

பிஸர்ட்டா சம்பந்தமாக சென்ற வாரம் பாதுகாப்புச் சபை விவாதித்த போதிலும் எவ்வித தீர்மானத்துக்கும் வரத் தவறியதால் பிஸர்ட்டா நிலைமைபற்றி ஐ. நா. பொதுச் சபை விவாதிக்க வேண்டுமென்று ஆசிய ஆபிரிக்க நாடுகளின் ஐ. நா. குழு கோரியுள்ளது. 99 அங்கத்துவ நாடுகளைக் கொண்ட ஐ. நா. பொதுச் சபையை அவசரமாகக் கூட்ட வேண்டுமானல் 50 நாடுகளின் ஆதரவு கிடைக்க வேண்டும்.

பொதுச்சபையை அவசரமாகக் கூட்ட வேண்டுமென்ற கோரிக்கைக்கு ஆசிய ஆபிரிக்க குழு இதுவரை 47 அங்கத்துவ நாடுகளின் கையொப்பங்களைச் சேகரித்துவிட்டது. இன்னும் மூன்று அங்கத்துவ நாடுகளின் கையொப்பங்கள் தான் தேவை. இக்கையெழுத்துக்களும் விரைவில் கிடைத்துவிடுமென்றும் அநேகமாக பொதுச்சபையின் அவசரக் கூட்டம் திங்கட்கிழமை நடைபெறலாமென்றும் ஐ. நா. வட்டாரங்களில் கூறப்படுகிறது.

## நேப்பாள மன்னர் சீன செல்வார்

காட்மாண்டு, ஆக. 3

மக்கள் சீனக்குடியரசின் அழைப்பின் மீது நேப்பாள மன்னர் மகேந்திரா இவ்வருடம் செப்டம்பர் மாதத்தில் சீனவுக்கு விஜயம் செய்யவிருக்கிறர், மூன்றுவாரங்கள் சீனவில் சுற்றுப்பிரயாணம் செய்யவிருக்கும் மன்னர் சீனவின் 12 வது ஆண்டுவிழாவிலும் கலந்துகொள்வார்.

காங்கோ

# புதிய அரசாங்கத்திடம் பார்லிமெண்ட் நம்பிக்கை

### கிஸங்காவுக்கு உதவிபிரதமர்பதவி

லியப்போல்ட்வில்லி, ஆக. 3

திரு. சிறில் அடௌலாவைப் பிரதம மந்திரியாகக் கொண்ட காங்கோவின் புதிய அரசாங்கத்தின் மீது நம்பிக்கை தெரிவிக்கும் தீர்மானம் காங்கோ பார்லிமெண்ட் கூட்டத்தில் நிறைவேற்றப் பட்டதாக கூறப்படுகிறது.

லுமும்பா மந்திரி சபையில் உதவிப் பிரதமராக இருந்தவரும் லுமும்பா ஆதரவாளரும் ஸ்டான்லிவில்லி மாகாணத் தலைவருமான கிஸங்கா இப் புதிய மந்திரி சபையிலும் ஒரு உதவிப் பிரதமமந்திரியாக நியமிக்கப்பட்டுள்ளார். திரு. சின்ட்வேயும் திரு. மாலி காங்கோவும் உதவிப் பிரதமர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

வெளிநாட்டு மந்திரி பதவி வகுத்த பொம்பகோ மீண்டும் வெளிநாட்டு மந்திரியாக நியமிக்கப்பட்டுளார். லுமும்பாவுக்குப் பின் பிரதம மந்திரியாக நியமிக்கப்பட்டிருந்த திரு. ஜோசப் இலியோ புதிய மந்திரிசபையில் தகவல் மந்திரியாக நியமிக்கப்பட்டுள்ளார்' புதிய அரசாங்கத்தில் கடாங்கா தலைவர் ஷோம்பேயும் அவரது ஆதரவாளர்களும் சேரவில்லை.

## அங்கோலாவில் கடும் சண்டை

லுவண்டா, ஆகஸ்ட் 2

வட அங்கோலாவில் தேசியவாதிகளுக்கும், போர்த்துக்கல் துருப்புக்களுக்குமிடையே கடுமையான சண்டை நடைபெற்று வருவதாய் அறிவிக்கப்படுகிறது.

## அமெரிக்க சமாதான தொண்டர்கள்

புதுடில்லி, ஆகஸ்ட் 2

அமெரிக்க சமாதானத் தொண்டர்படையைச் சேர்ந்த 25 பேர், பஞ்சாபில் இந்தியத் தொழிலாளர்களுடன் சேர்ந்து பாணியாற்றுவார்கள் என அறிவிக்கப்படுகிறது

## பஸ் விபத்தில் 28 பேர் பலி

லண்டன், ஆக. 3

சுவிட்சர்லாந்தில் சுற்றுப் பிரயாணம் செய்யச் சென்றிருந்த அமெரிக்க உல்லாசப் பிரயாணிகள் கோஷ்டியொன்று பிரயாணம் செய்து கொண்டிருந்த பஸ், பாதையை விட்டுவிலகி ஒரு கால்வாய்க்குள் விழுந்ததில் 20 பேர் மாண்டிருக்கக் கூடுமென அஞ்சப்படுகிறது. அந்த பஸ்ஸில் மொத்தம் 28 பிரயாணிகள் இருந்தனர்.

## மாமியும் மருகனும் மரணம்

குருநாகல், வியாழன்

மாமியாரின் மரணச்சடங்குக்குச் சென்றிருந்த ஒருவர், அடுத்தநாட்காலை மரணமாகிவிட்டார்.

ஓய்வுபெற்ற போஸ்ட்மாஸ்டர் திரு. டி. கே. தம்புகல, பெல்லன்தெனியாவில் நடைபெற்ற தமது மாமியாருடைய மரணச்சடங்குக்குச் சென்றிருந்தார்.

மரணச்சடங்கு முடிவுற்றதும் தமது இராச்சாப்பாட்டை முடித்துக்கொண்டு படுக்கைக்குச் சென்றுவிட்டார். ஆனல் காலையில் அவரைப் பார்த்தபோது இறந்துகிடக்கக் காணப்பட்டார்.

அவருடைய மரணச்சடங்குகள் அடுத்தநாள் நடைபெற்றன.

### மணிவாக்கு

உள்ளத்தில் உண்மை ஒளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும்.

—பாரதி


# ஈழநாடு

EELA NADU

யாழ்ப்பாணம் பிலவ ஆண்டு ஆடி மீ 20உ (4 8-61)

EELA NADU: National Tamil Daily Post Box 49. Jaffna Telegrams EELA NADU Jaffna Phone: 389.


## இலங்கை வானொலி

இலங்கை வானொலியை ஒரு கார்ப்பரேஷன் நிர்வாகத்துக்கு மாற்றுவதுடன், யாழ்ப்பாணம், காலி இவ்விரு இடங்களிலும் இரு அஞ்சல் நிலையங்களை ஏற்படுத்த வேண்டுமென்றும் கல்வி அமைச்சர், அரசாங்கத்துக்கு யோசனை கூறியுள்ளதாக ஒரு செய்தி கூறுகிறது. இது உண்மையாயின், பலவிதங்களிலும் பெரிதும் வரவேற்கத்தக்கதாவதுடன், அரசாங்கமும் காலம் தாழ்த்தாமல் இது பற்றி வேண்டிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அரசாங்கத்தின் ஓர் இலாகாவாக இலங்கை வானொலி இருந்து வருவதால், அது பூரணமாக விரும்பத்தக்க அளவு வளர்ச்சிபெற முடியாமலுள்ளது. பல கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டிருப்பதுடன், அதன் ஊழியர்களும் சுதந்தரமாக அதன் வளர்ச்சிக்குப்பாடுபட முடியாமல் பல தடைகளுமுள்ளன. இதே சமயம் அரசாங்கம் வானொலியைத் தன் கட்சிப்பிரசாரத்துக்குப் பாவிப்பதாயும் புகார்கள் எழுவதுண்டு. பி. பி. ஸி. என்ற 'பிரிட்டிஷ் பிராட் காஸ்டிங் கார்ப்பரேஷன்' முதலில் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் நேர்முக நிர்வாகத்தில் இருந்தது. பின்னர் அதன் சேவையை விரிவாக்க தனிப்பட்ட கார்ப்பரேஷனாக அமைக்கப்பெற்றபின், பலவிதங்களிலும் அபிவிருத்தி அடைந்துள்ளது. பிரிட்டன் காட்டியுள்ள முன் மாதிரியை இலங்கையும் பின்பற்றலாம்.

வர்த்தக ஒலிபரப்பையும் இலங்கை செய்துவருவதால், பண விஷயமாகச் சங்கடங்கள் இருக்கத்தேவையில்லை. வர்த்தக ஒலிபரப்பிலே இதுவரை பெரிய நிர்வாக ஊழல்கள் இருந்துள்ளதாக சப்பிரமடு விசாரணைக் கமிஷன் அம்பலப்படுத்தியுள்ளது. இப்போது டைரக்டர்ஜெனரல், அந்த ஊழல்களை நீக்கப்படிப்படியாக நடவடிக்கை எடுத்துவருவதாகத் தெரிகிறது. சீக்கிரத்தில் அக்குறைகள் நீங்கி, வருமானமும் பெருகக்கூடும். அந்த வருமானத்தைக் கொண்டே, இதைக் கார்ப்பரேஷனுக்கிலாபகரமாக நடத்துவதுடன் பல அபிவிருத்திகளையும் செய்ய முடியும்.

கொழும்பு நிலையத்திலிருந்து செய்யும் ஒலிபரப்புகள், யாழ்ப்பாணத்தில் சரிவரக் கேட்பதில்லை என்றும் ஆகவே யாழ்ப்பாணத்தில் ஓர் அஞ்சல் நிலையத்தை ஏற்படுத்த வேண்டுமென்றும் அமைச்சர் உணர்ந்து செய்துள்ள சிபார்சை சிறப்பாக வடமாகாணத்திலுள்ள மக்களனைவரும் வரவேற்கின்றார்கள். யாழ்ப்பாணத்திலுள்ள கலைஞர்கள், கொழும்புக்குச் சென்றுவருவதில்; சிரமமும் செலவுமுண்டு. அதனால் பல கலைஞர்கள், வானொலியில் கலந்து கொள்ளவும் முடியாமலுள்ளது. யாழ்ப்பாணத்தில் ஓர் அஞ்சல் நிலையத்தை அமைத்தால், இங்கிருந்தே பல கலைஞர்கள், வானொலியில் கலை நிகழ்ச்சிகளில் பங்குபற்றி, பணிசெய்து இதைச் சிறப்பிக்க முடியும்.

அமைச்சர் கூறியுள்ள இந்த இரு நல்ல யோசனைகளும் ஏட்டளவில் நின்றுவிடாமல், கூடிய விரைவில் அமுலுக்கு வர வேண்டும். இதனால் அரசாங்கத்துக்குச் செலவுமில்லை ஒரு பெரிய பொறுப்பும் நீங்கும். இலங்கை வானொலி ஒரு கார்ப்பரேஷனாகி, யாழ்ப்பாணத்தில் ஒரு வானொலி நிலையமும் அண்மையில் ஏற்படுமென்றே நம்புகிறோம்.

# 300 ஆண்டுகளாக நடைபெறும் கோவாவின் சுதந்திரப் போர்

**வீரசிவாஜியின் காலம் தொடங்கி இன்றுவரை கடந்த முன்னூறு ஆண்டுகாலமாகக் கோவாவின் விடுதலைக்காக நடைபெற்று வரும் போராட்டத்தைப்பற்றி 'சைலகா' இக்கட்டுரையில் எழுதி விபரித்துள்ளார்.**

இந்தியாவுக்கு முதல் முதலாகக் கடல்மார்க்கமாகவந்து சேர்ந்த ஐரோப்பியர் போர்த்துக்கீசர்கள் ஆகையால் நம் நாட்டில் பிரிட்டிஷ் ஆட்சிக்கு ஒருவிதம் வழிவகுத்துக் கொடுத்தவர்கள் போர்த்துக்கீசரே எனக் கூறலாம். கி.பி.1498-ல் வாஸ்கோடகாமாஎன்னும்போர்த்துக்கீசர்முதன்முதலாகநாட்டுக்கு வந்ததை அடுத்து கி.பி. 1500ல்அல்பன்சோ அல்புகிர்க் என்னும் போத்துக்கீசர் ஒருவர் கோவாவை அக்காலத்து பீஜப்பூர் சுல்தானிடமிருந்து கைப்பற்றிக்கொண்டார். இவ்விதம் அவர் கைப்பற்றிக்கொண்ட கோவாவை பீஜப்பூர் சுல்தானால் திரும்ப மீட்டுக் கொள்ள இயலவில்லை.போர்த்துக்கீசர்வசம் அப்பொழுது பீரங்கிகள் அதிகமாகஇருந்ததாலும் வலுவான கடற்படை ஒன்று துணையாகநின்றதாலும் பீஜப்பூர் சுல்தானால் அவர்களை வென்று திரும்பக்கோவாவை கைப்பற்ற இயலவில்லை.

ஆனால் அதன்பிறகு கோவா அருகே உள்ளபகுதிகளை ஆண்ட மராட்டியர் போர்த்துக்கீசரைசும்மாவிடவில்லை. கோவாவை திரும்பக் கைப்பற்ற அவர்கள் மீண்டும் மீண்டும் முயற்சிகள் மேற்கொண்டேவந்தனர் 1667-ல் கோவா வைஸ்ராயாக இருந்த கோண்டேடி வின்சென்ட் என்பவர் தன் ராஜ்யத்தில் கிறிஸ்த்து மதத்தைத் தவிர வேறு எந்த மதமும் இருக்கக்கூடாதுஎன உத்தரவிட்டார். இதை அறிந்த சிவாஜி 1669-ல் கோவாமீது படையெடுத்து அதன் வடபகுதியான பார்த்தேசைக் கைப்பற்றிக் கொண்டார். இதை அறிந்தகோண்டே தன் உத்தரவை ரத்துச் செய்து, சிவாஜியோடு சமரசம் செய்துகொண்டார்.

சிவாஜி இறந்தபிறகுபோர்த்துக்கீசர் மீண்டும் தங்கள்விஷமங்களைத் தொடங்கினர்.இதை அறிந்த சிவாஜியின் மகன் சாம்பாஜி கோவாமீது படை எடுத்தார்.ஆனல் அதே சமயம் டில்லியிலிருந்து முகலாயர் படைகள் அவர் ராஜ்யத்தின் மீது படை எடுத்து வந்ததால் கோவா போர்முனையில் தன் படைகளை வாபஸ்பெறவேண்டிய நிர்ப்பந்தம் அவருக்கு ஏற்பட்டுவிட்டது.

இதற்கிடையில் இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சி வேரூன்றத் தொடங்கியது. போர்த்துக்கீசா உதவிக்கு பிரிட்டிஷார் கிளம்பினர். இதனல் புது பலமும் தென்பும் பெற்ற போர்த்துக்கீசர் மீண்டும் வாலாட்ட ஆரம்பித்தனர். இதைப்பார்த்த முதல் பிஷ்வாவான பாஜிராவ் போர்த்துக்கீசர்மீது 1721-ல் போர் தொடுத்தார். அப்போரில் தோர்த்துப்போனபோர்த்துக்கீசர் பிரிட்டிஷாரைக் கூடக்கலந்துகொள்ளாதுபாஜிராவோடு சமரசம் செய்து கொண்டனர். தாங்கள் கைப்பற்றி ஆண்டுவந்த பஸ்ஸீனை பாஜிராவுக்குக் கொடுத்து சமரசம் செய்து கொண்டனர்.

அதன்பிறகுமராட்டியர் பலம் குன்றியது. நாடு முழுவதும் படிப்படியாக பிரிட்டிஷார் ஆட்சிக்கு அடிமைப்பட்டது. பிரிட்டிஷாரோ போர்த்துக்கீசருக்கு ஆதரவாக நின்றனர். இதனல் கோவா விடுதலைப் போராட்டம் ஏதும் கடந்த சுமார் 200 ஆண்டுகளாக நடை பெறவில்லை 1946-ல் பிரிட்டிஷார் நமக்கு சுயராச்சியம் வழங்கிவிட்டு வெளியேறினர். இதனல் கோவாவில் போர்த்துக்கீசிய ஆட்சிக்கு பாதுகாப்பாக நின்ற ஒருஆதரவுசக்தியும் அகன்றது. அன்றிலிருந்து கோவா விடுதலைப்போர் தொடங்கிவிட்டது.

பிரிட்டிஷார் நம் நாட்டை விட்டு வெறயேறி நல்லபிள்ளையாக நடந்துகொண்டுவிட்ட போதிலும் கோவாவில்போர்த்துக்கீசிய ஆட்சிக்கு இன்றும் ஆதரவளித்து வருகின்றனர். போர்த்துக்கல் வட அத்திலாந்திக் ஒப்பந்த நாடுகளில் ஒன்று என்ற காரணத்தால் அமெரிக்காவும் அதற்கு ஆதரவும் உதவியும் அளித்துவருகிறது. அமெரிக்காவிலிருந்து பெறும் ஆயுதத்தையும், பணபலத்தையும் கோவா சுதந்திர இயக்கத்தை நசுக்கி ஒடுக்கபோர்த்துக்கீசிய அரசாங்கம் பயன்படுத்தி வருகிறது.

# 'அறத்தினல்தான் வெற்றி'

## பாரதம் போதிக்கும் உண்மை

சென்னை, ஆகஸ்ட் 4

"மகாபாரதத்தில் இல்லாத விஷயம் வேறெந்த நூலிலும் இல்லை. தெருவில் செல்லும் பொழுது அனுஷ்டிக்கவேண்டிய முறைகளைக் கூட வியாஸர் அதில் விளக்கியிருக்கின்ருர்" என சென்னை விவேகானந்தக் கல்லூரியில் நடைபெற்ற வியாசர் தினக் கொண்டாட்டத்திற் பேசும்போது மணிக்கொடி ஸ்ரீநிவாசன் குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து பேசியதாவது:-

"நல்வாழ்க்கை முறையை விளக்கப் பல்வேறு இலக்கிய உத்திகளை வியாசர் கையாண்டிருக்கின்ருர். அவர் பயன்படுத்தாத உத்தி இல்லை. கற்பனைக்கெட்டாத நெருக்கடியான கட்டங்களை மகாபாரதத்திற் காணலாம். எல்லாப் பிரச்சினைகளுக்கும் அது பதில் கொடுக்கின்றது. அதில் வரும் தர்ம விசாரங்களுக்குத் தற்காலத் தத்துவ ஞானிகள் ஈடுகொடுக்க முடியாது. பாரத நாட்டின் ஐக்கியம் ரிஷிகளால் ஏற்படுத்தப்பட்டது."

வெற்றிக்கான வழிபற்றி அவர் குறிப்பிடுகையில், வெற்றி மறத்தினல் அல்ல என்றும் அறத்தினல்தான் வெற்றி என்பதே மகாபாரதம் உபதேசிக்கும் உண்மையெனவும் கூறினர்.

ஸ்ரீ பிஸ்ரீ ஆச்சார்யா பேசுகையில இராமாயணம் பாடிய கவிச்சக்கரவர்த்தி கம்பர், மகாபாரதத்தையும் நன்ருகக் கற்றவராக இருந்திருக்க வேண்டுமென்றும், பல இடங்களில் அவர் கையாளும் பாணி வியாசரின் பாணியை ஒத்திருப்பதாகவும் கூறினர்.

# 'அறவாழ்வு வாழ்ந்து நாட்டை நல்வழிப்படுத்துக'

—நீதிமந்திரி

நிவித்திகல, வியாழன்

"நாட்டைப் பாழாக்கும் அழிவுச் சக்திகளில் இருந்து பிள்ளைகளைப் பாதுகாக்க வேண்டும்."

இவ்வாறு நீதி மந்திரி திரு. சாம் பி. சி. பர்னண்டோ நிவித்திகல பாடசாலை மாணவர் ஏற்படுத்திய கலா விஞ்ஞானக் கைப்பணிப் பொருட்காட்சியைத் திறந்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து பேசியதாவது:

"குடி, சூது போன்ற தீய ஒழுக்கங்கள் பிற் சந்ததியாருக்குத் தீங்கு விளைப்பதால் இவற்றை அறவே ஒழித்து அறவாழ்வு வாழ்ந்து இளையோருக்கும் நாட்டுக்கும் நல்வழி காட்டவேண்டும்.

இன்றைய கல்வி முறை செல்வர் - ஏழைகள் என்ற பாகுபாடின்றித் தமது விருப்பத்திற்கேற்பக் கல்வி கற்பதற்கான முறையில் அமைந்துள்ளது. மாணவர்கள் அனைவரும்நமக்குமாத்திரமன்றிநாட்டுக்குச் சேவை செய்வதற்குமாகக் கல்வி பயில வேண்டும். கல்வி அதிகாரிகளும், ஆசிரியர்களும் நேர்மையுடன் பணியாற்றி நாட்டின் அமைதியான நிர்வாகத்துக்கு ஒத்துழைக்க வேண்டும்".

இரத்தினபுரி எம். பி. திரு. தனபால வீரசேகரா பேசும் போது 25 சதத்தில் இருந்த அரசியின் விலையை 75 சதமாக அதிகரித்ததை யு. என். பி. மறந்துவிட்டு ஸ்ரீலங்காசுதந்திரக்கட்சி, வெள்ளைச்சீனி, மாவு ஆகியவற்றின் விலைக்ளைக்கூட்டி, ஏழைகளின் வயிற்றில் அடிக்கிறது என்று சொல்லி அது மக்களைத் தவருக எண்ணச் செய்கின்றதென்ருர்.

---

## அபிவிருத்தி திட்டங்களுக்கு அதிகபணம்

யக்கலை வியாழன்,

போலந்து உதவியுடன் அரசாங்கம் வெரலா தோட்டத்தில் 23 தொழிற்சாலைகளை ஆரம்பிக்க இருக்கிறது என்று கம்பஹா எம். பி. திரு. எஸ். டி. பண்டாரநாயக்கா கலிமுலக் கலனி கிராம அபிவிருத்திச்சபை ஆண்டு விழாவிற் பேசும்போது குறிப்பிட்டார்.

## ஐயாறன் எழுதுவது

யாழ்ப்பாணத்து ஓட்டல் ஒன்றில் சாப்பிடச் சென்றேன் சாப்பாட்டுடனே பேச்சுக் கச்சேரி வெகு ருசியாக இருந்தது.

400 ரூபாய் "விஸா வரி" முதல் ஐரோப்பிய கூட்டுச் சந்தை, ராஜன்பாபு உடல் நிலை, நேருவின் ராஜதந்திரம், பிஸர்ட்டா தகராறுவரை பல விஷயங்களும் அடிபட்டன.

* * *

மேசை துடைத்துவிட்டுச் சென்றபின் இலை போடவும், பின்னர் பரிமாறவும் சற்று நேரமாயிற்று. உடனே ஓர் அன்பர், நெய்வேலியிலே உள்ள ஒரு கான்டீனையும், அங்குள்ள சாப்பாட்டையும், பரிமாறும் நேர்த்தியையும் வர்ணித்தார். "சேர்ந்தாற்போல் 300 பேர் உட்கார்ந்து சாப்பிடுவர். இலைபோட ஒருவர். உடன் தண்ணீர் வைக்கவும், மளமளவென்று சாப்பாடு பரிமாறவும் தனித்தனி ஆட்கள். அருமையான சாப்பாடு. சென்னையிலும் அப்படித்தான். அந்த மாதிரி இங்கு எங்கேய்யா வரப்போகிறது?".

"ஏன்,இங்கும் பணம்போட்டு ஓட்டலை நல்லபடியாக ஏன் அப்படி நடத்த முடியாது?"

"பணம் போட்டாலும் நல்ல திறமையான ஆட்கள் வேண்டாமா? தமிழ் நாட்டிலிருந்து சமையலுக்கும், பலகாரம் போடவும் நல்ல ஆட்களை வரவழைத்தால் அப்படி நடத்தலாம். ஆனல் 'விஸா' (பித்து) வரி ரூ. 400 போட்டிருக்கிருர்களே! அதையெல்லாம் கட்ட முடியுமா? அப்படிக் கட்டினலும் ஆட்களை வரவிடுவார்களா?..."

* * *

"நேரு ஏன் சும்மா இருக்கிருர்? அவர் ஏதும் நடவடிக்கை எடுக்கப்படாதா?"

"அவர் ஒன்றுமே செய்யமாட்டார். இது இலங்கையின் உள்நாட்டு விஷயம். இதில் தலையிடமாட்டார். அவர் அவதார புருஷர். மகாத்மா கூறியபடி மிகப் பொறுமையாக இருக்கிருர்...."

"1956-ம் வருடத்துக்குப்பின் இந்தியப் பிரஜையாகப் பதிவு செய்தால் 'விஸா்வரி' கட்ட வேண்டியதில்லைத்தானே?"

"ஆமாம், அப்படித்தான் சொல்லுகிருர்கள். ஆனல் இந்தியப் பிரஜையாகப் பதிவுசெய்து பாஸ்போர்ட். எடுத்ததும், உடனே 'போ இந்தியாவுக்கு' என்று விரட்டிவிட்டாலும் விரட்டலாம்தானே இதற்குச் சட்டம் எதுவும் இல்லை. அப்படிச் சட்டம் இருந்தாலும் அதையும் நினைத்தபடி மாற்றினல் யார் தடுக்க முடியும்?"

* * *

"பாருங்கள், முன்பெல்லாம் இந்தியாவுக்கு 6 மாதத்துக்கு ஒரு முறை ரூ. 50 கைச்செலவுக்குக் கொண்டு செல்ல முடியும். இப்போது அதை ஒரு வருஷமாக்கிவிட்டார்கள். விமானத்தில் 5 வருடத்துக்கு ஒரு முறைதான் செல்லலாம். தினசரி விமானம் காலியாகச் செல்லுகிறது. பெரிய நஷ்டம். காலியாகப் போய், நஷ்டப்பட்டாலும் சரி, இந்தியாவுக்கு விமான டிக்கெட் 5 வருஷத்துக்கு ஒரு முறையே கொடுப்போம் என்கிருர்கள். ரயிலில் போகத் தடையில்லையாம். இலங்கை விமானத்தில் டிக்கெட் கொடுப்பதால் அந்தப் பணம் இலங்கைக்குத்தானே சேரும். வெளி நாடு செல்லவில்லையே. ஏன் இந்த வீண் கெடுபிடி?..."

இப்படிப் பேச்சு வளர்ந்து கொண்டே போயிற்று. சாப்பாடும் முடிந்தது. நான் எழுந்து வந்துவிட்டேன்.

* * *

சென்னை சட்டசபைத் தலைவர் டாக்டர் கிருஷ்ணராவின்

(5ம் பக்கம் பார்க்க)

# "ஐ. தே. கட்சி தலைமையை தொழிலாளர் நாடுகிறார்கள்"

## இடதுசாரி கட்சிகள் மீது திரு. ஜயவர்த்தன கண்டனம்

கொழும்பு, வியாழன்

லங்கா சமசமாஜக் கட்சியும், கம்யூனிஸ்ட் கட்சியும் தொழிலாளர்களைத் திரஸ்கரித்துவிட்டதால் அவர்கள் இப்போது ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையை எதிர்பார்க்கிறார்கள் என திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன, ரத்மலானையில் நடைபெற்ற தேசிய தொழிலாளர் யூனியன் கூட்டத்தில் பேசும்போது கூறினார்.

வாழ்க்கைச் செலவு உயர்வதற்கு உதவியாய் இருந்த திறமையற்ற அரசாங்கத்தை ஆதரிப்பதில் இக்கட்சிகள் ஆவல் காட்டுவதால் தான், தொழிலாளர்கள் ஐ. தே. கட்சியின் தலைமையை எதிர்பார்க்கிறார்கள் எனவும் அவர் கூறினார்

"உயர்ந்து வரும் வாழ்க்கைச் செலவை கீழே கொண்டுவர அரசாங்கத்துக்கு ஒரு போதும் முடியாது. வேலை தரும்படியும், சிறந்த வாழ்க்கைத் தரத்துக்கும் மக்கள் கிளர்ச்சி செய்யும்போது—வாழ்க்கை நடத்தவே கஷ்டமாய் இருக்கும்போது—கணவனின கொள்கைகளைப் கடைப்பிடிப்பதாய்க் கூறும் பிரதமர், பாண், சீனி, சிகரெட்டுகளின் விலையை உயர்த்தியிருக்கிறார். மாதம் 300 ரூபாய் சம்பாதிக்கும் பயிற்சி பெற்ற ஒரு தொழிலாளி 4 சதவிகிதம் அரசாங்கத்துக்கு வரி செலுத்த வேண்டியிருக்கிறது" என்றும் திரு. ஜயவர்த்தன குறிப்பிட்டார்.

## நஷ்டம்தரும் கூட்டுறவுச் சங்கங்கள்

கொழும்பு, வியாழன்

இப்பொழுது நஷ்டத்தில் நடைபெறும் கூட்டுறவுச் சங்கங்களைக் கூட்டுறவு மொத்த விற்பனவு இலாகா எடுத்து நடத்தக் கூடுமென்று தெரிகிறது.

வாழ்க்கைச் செலவு பற்றி விசாரணை செய்ய நியமிக்கப்பட்ட குழு செய்துள்ள சிபார்சின் விளைவாகவே கூட்டுறவுச் சங்கங்களைக் கூட்டுறவு மொத்த விற்பனவுச் சங்கம் எடுத்துக் கொள்ளக்கூடும்.

ஆரம்ப நடவடிக்கையாக நஷ்டத்தில் நடைபெறும் கூட்டுறவுச் சங்கங்களின் பெயர்ப்பட்டியல் ஒன்றை உணவு, வர்த்தக அமைச்சு தயாரிக்கும்.

பல கூட்டுறவுச் சங்கங்கள் நஷ்டத்தில் நடைபெறுவது பற்றி உணவு, வர்த்தக அமைச்சின் கவனத்துக்குச் சமீபத்தில் கொண்டுவரப்பட்டதாக அமைச்ச அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## டுனிஸிய மந்திரி—கென்னடி சந்திப்பு

வாஷிங்டன், ஆக. 3

வாஷிங்டன் வந்துள்ள டுனிஸிய பாதுகாப்பு மந்திரி நேற்று அமெரிக்க ஜனதிபதி கென்னடியைச் சந்தித்துப் பேசினார். இதற்குமுன் அமெரிக்க ராஜாங்க மந்திரி திரு. டீன் றஸ்க்கைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார்.

பிஸர்ட்டா நிலைமைபற்றியும் பிஸர்ட்டாவிலிருந்து பிரஞ்சுத் துருப்பினர் வெளியேற்றப்படுவதற்கு ஆதரவு கோரியும மற்றொரு பிரதிநிதியை டுனிஸிய அதிபர் ஜெனரல் போர்கிபா மாஸ்கோவுக்கு அனுப்பியுள்ளார்.

தென் அமெரிக்க நாடுகளுக்கும், அரபு நாடுகளுக்கும் மற்றுமிரு பிரதிநிதிகள் அனுப்பப்பட்டுள்ளனர்.

## ஐயாறன்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

மறைவு தமிழ் நாட்டின் பெரிய நஷ்டமாகும். அவரும் அவரது தகப்பனர் ஸ்ரீ ராமராவும் நாட்டின் விடுதலைப் போராட்டத்துக்குப் பெரும் உதவி செய்தவர்கள். தடியடிபட்டுக் காயம் பட்ட தொண்டர்களுக்கு, இலவசமாகச் சிகிச்சை செய்து பணமும் கொடுத்து உதவினர். அவரது தாய்மொழி கன்னடமாயினும், தமிழ் கற்று தமிழர்களின அமோகமான மதிப்பையும் ஆதரவையும் பெற்ருர்.

சங்கீதம் முதலிய பல கலைகளின் பொது இயக்கங்களிலும் ஈடுபட்டு, நல்ல சேவை புரிந்தவர். அவர் ஆன்மா சாந்தியடைவதாக!

## ராஜரத்ன

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கோறிஸ் பெரேராவின் கடைக்குச் சேதம் விளைவித்ததாகவும் அவருக்குக் காயம் உண்டு பண்ணியதாகவும் திரு மனம்பெரி என்பவரின் காருக்குச் சேதம் விளைவித்ததாகவும் கே. எம். பி. ராஜரத்ன, ஜி. எம். குணரத்தின, கே. எம். ஜயசேகரா, ஜே. வில்லியம், டபிள்யு. எம். பியதாசா, ஆர். எம். என். பெட்ரிக் ஹாமி, டபிள்யு. எம். உக்குபண்டா, டபிள்யு. எம். அப்புஹாமி, எம். லயனல் ஆகியோர் மீது குற்றம்சாட்டித் தொடரப்பட்ட இந்த வழக்கு பதுளை நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு எதிரிகள் குற்றவாளிகளாகக் காணப்பட்டனர். பதுளை மாவட்ட நீதிபதி அவர்களுக்கு தலா இரண்டு வருடக கடுங்காவல் தண்டனை விதித்தார்.

எதிரிகள் இத் தீர்ப்பை ஆட்சேபித்து சுப்ரீம் கோர்ட்டுக்கு அப்பீல் செய்தனர். அப்பீல் வழக்கு விசாரணையில் பிரதான குற்றச்சாட்டு ஊர்ஜிதம் செய்யப்பட்டது. அவர்களின் தண்டனை ஒன்றரை வருடக் கடூழியச் சிறைத்தண்டனையாகக் குறைக்கப்பட்டது. திரு. மனம்பெரியின் காருக்குச் சேதம் வி[illegible]த்தனர் என்ற குற்றச்சாட்டு தள்ளுபடி செய்யப்பட்டது.

திரு. ராஜரத்தின பிரிவிகவுன்சிலுக்கு அப்பீல் செய்வாரென எதிர்பார்க்கப்பட்டது. ஆனல் பொருளாதார காரணங்களால் அவர் அப்பீல் செய்யும் எண்ணத்தைக் கைவிட்டு விட்டதாகத் தெரிவித்து இனி இதன் முடிவு நீதிமந்திரியிடமும் கவர்னர் ஜெனரலிடமும் தான் தங்கியுள்ளதென்று திரு. ராஜரத்தினவின் வழக்கறிஞர் சில்வ ரங்களுக்குமுன்னர் தெரிவித்திருந்தார்.

இன்று கோர்ட்டில் ஆஜர் செய்யப்பட்ட எதிரிகள் எட்டுப் பேருக்கும் அப்பீல் நீதிமன்றம் அளித்த தீர்ப்பை நீதிபதி திரு. லயனல் சமரத்துங்க அறிவித்தார். இவர்களுக்கு ஒன்றரை வருடக் கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

தீர்ப்பு தெரிவிக்கப்பட்டதும் சிறைச்சாலை அதிகாரிகள் சிறைச்சாலை மோட்டார் வானில் எதிரிகளை ஏற்றிக் கொண்டு பதுளை சிறைச்சாலைக்குச் சென்றது. பொலிஸ் கார் அதன் பின்னல் சென்றது.

# பொய்சாட்சிகூறியவருக்கு 3 மாத கடுங்காவல்

## கொலை வழக்கில் எதிரி விடுதலை

யாழ்ப்பாணம், வியாழன்

புத்தூரைச் சேர்ந்த வல்லிபுரம் சுப்பிரமணியம் என்பவர், புத்தூர் மேற்கைச் சேர்ந்த தில்லையர் செல்லப்பா என்பவரைக் கத்தியால் குத்திக் கொலை செய்ததாகக் குற்றஞ்சாட்டித்தொடரப்பட்ட வழக்கு வடமாகாண அசைஸ் கோர்ட்டில் நீதியரசர் டாக்டர் எச். டபிள்யூ. தம்பையா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

"கோர்டைக் கருவியாக்கி மழுப்பிப் பேசுவது மனிதனைக் கொடிய சித்திரவதைக்குள்ளாக்குவதாகும்" என்று கொலைச் சம்பவத்தை நேரில் கண்ட சாட்சி தில்லையர் கனகன் என்பவருக்கு 3 மாதக் கடுங்காவற் தண்டனை விதித்துப் பேசுகையில் நீதியரசர் டாக்டர் தம்பையா குறிப்பிட்டார்.

முடிக்குரிய வழக்கறிஞர் திரு. பி. நகுலேஸ்வரன் வழக்கை நடத்தினார். திரு. எஸ். ஆனந்தா குமாரசாமி உதவியுடனும், திரு. ஜி. வி. பாலசிங்கத்தின் அனுசரணையுடனும் திரு. ரி. கணேசலிங்கம் எதிரி தரப்பில் ஆஜரானர்.

தில்லையர் கனகனை இரண்டரை மணிநேரம் திரு. ரி. கணேசலிங்கம் குறுக்கு விசாரணை செய்த பிற்பாடு, சாட்சி முக்கிய விஷயங்களில் கோர்ட்டில் முரணை சாட்சியம் அளித்திருப்பதாகத் தெரிவித்தார்.

திரு. ரி. கணேசலிங்கம் தொடர்ந்து குறிப்பிட்டதாவது: "சாட்சி தான்கூறிய சாட்சியம் பிழையென்று கையொப்பம் வைப்பதற்கு முன்பு நீதியரசர் அதைப் படித்து விளக்கம் கூறவில்லை என்று ஒத்துக்கொண்டிருக்கிறார். இரண்டாவதாக சாட்சி, தன்னுடைய வீட்டிற்கும் கொலையுண்டவரின் வீட்டிற்கும் 25 யார் தூரம் என்று ஜூரர்கள் முன்னல் சொல்லியது பொய் என்றும், ஆனல், கொலையுண்டவரின் வீட்டிற்கும் தனது வீட்டிற்கும் அரை மைல் தூரம் என்றும் நீதியரசர் முன்பாக சரியாக ஒத்துக் கொண்டிருக்கிறார். அடுத்ததாக வண்டில் நுக ஆணியைப் பற்றிப் பிரஸ்தாபிக்கும்போது சாட்சி முரணைக் கூறியிருக்கிறார். ஒரு சந்தர்ப்பத்தில் நுக ஆணியைத்தான் காணவில்லை என்று கூறியவர், மறுபடியும் நீதியரசர் முன்பாக, எதிரி ஒரு கையில் நுக ஆணியும் மற்றக்கையில் கத்தியும் வைத்திருந்ததாகக் கூறியிருக்கிறார்.

"வழக்கில் இது மிக முக்கியமான காரியம். சாட்சி, தான் ஜூரர்கள்முன்னல் கூறியதெல்லாம் பொய் என்று ஒத்துக் கொண்டும் இருக்கிறார். இந்த நிலையில் வழக்கை மேலும் தொடர்ந்து நடத்துவதுபற்றி ஜூரர்கள் ஆராயவேண்டும்."

சந்தேகத்துக்கு இடமில்லாமல் சாட்சியத்தை நம்ப முடியாது என்று ஜூரர்கள் ஏகமனதாக அபிப்பிராயம் தெரிவித்தனர்.

கோர்ட்டை அவமதித்தற்கு உமக்கு தண்டனை ஏன் வழங்கக் கூடாது என்பதற்கு ஆதாரம் காட்ட முடியுமா? என்று நீதியரசர் சாட்சியம் சொல்லிய கனகனைப் பார்த்துக்கேட்டார்.

குற்றவாளியல்ல என்று கண்டபின் எதிரியான வல்லிபுரம் சுப்பிரமணியம் விடுதலை செய்யப்பட்டார்.

சாட்சி, தான் உண்மையைத் தவிர வேறு ஒன்றும் சொல்லவில்லை என்று திரும்பத் திரும்பக்கூறினர். கோர்ட்டை கௌரவிக்காமல் கனகன் சாட்சியை மழுப்பிக்கூறியிருக்கிருர் என்று நீதியரசர் பிரஸ்தாபித்தார்.

நீதியரசர் டாக்டர் தம்பையா தொடர்ந்து கூறியதாவது:-

"பலமுறை கோர்ட் எச்சரித்த பிறகும், சாட்சி கேள்விகளுக்கு நேரடியாகப் பதில் கூறவில்லை. இப்படியான சாட்சியங்கள் யாழ்ப்பாணத்தில் இப்பொழுது சகஜம். இவர்கள் வீட்டுக்கு சந்தோஷமாக திரும்பிப்போகலாம் என்றும் நினைக்கிறார்கள். மூன்று மாதங்களுக்கு மேல் இவருக்கு சிறைத் தண்டனை வழங்க சட்டம் இடம் தராதது துர் அதிர்ஷ்டம்."

# ஐரோப்பிய பொதுச்சந்தையில் பிரிட்டன் சேரும் விஷயம்

## சாம்ராஜ்ய பிரதமர்கள் மாநாட்டுக்கு மாக்மில்லன் ஆதரவு

லண்டன், ஆக. 3

ஐரோப்பிய பொதுச்சந்தையில் பிரிட்டன் சேர்வது சம்பந்தமான விவாதத்தை பார்லிமெண்டின் இரு சபைகளும் முடிக்கும் தறுவாவாயில் இருப்பதாய் அறிவிக்கப்படுகிறது. அரசாங்கம் இதுசம்பந்தமாக பேச்சுவார்த்தை நடத்துவதற்கு பெரும்பான்மை ஆதரவு பெறும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

இது பற்றி சாம்ராஜ்ய நாட்டுப் பிரதமர்களின் பொதுவான அங்கீகாரம் பெற வேண்டுமென எதிர்க் கட்சி வற்புறுத்தியது. சாம்ராஜ்ய நாடுகளுக்கு இதனல் கஷ்டம் ஏற்படாதென உறுதி மொழி அளிக்கப்பட வேண்டுமென எதிர்க் கட்சித் தலைவர் திரு கெயிட்ஸ்கல் வற்புறுத்தினர்.

இது சம்பந்தமாக சாம்ராஜ்ய பிரதம மந்திரிகள் மகாநாடு நடைபெற வேண்டுமென்ற யோசனையைத் தாம் ஆதரிப்பதாய் திரு. மாக்மில்லன் கூறினர்.

## தென்னபிரிக்க மந்திரி சபை

ஜோகன்னர்ஸ்பர்க், ஆக. 3

தென்னபிரிக்கப் பிரதமர் டாக்டர் வெர்வூட் தமது மந்திரி சபையைத் திருத்தி அமைத்திருக்கிறார். புதிய மந்திரிசபையில் தென்னபிரிக்க இந்தியர் விவகாரங்களுக்கெனத் தனி இலாகா நிறுவப்பட்டுள்ளது மூன்று பேர்கள் மந்திரி அந்தஸ்துக்கு உயர்த்தப்பட்டுள்ளனர்.

## மானிப்பாய் இந்துசமய விருத்திச் சங்க ஆண்டுவிழா

மானிப்பாய், வியாழன்

மானிப்பாய் இந்துசமய விருத்திச் சங்கத்தின் ஆண்டு விழாவும் வருடாந்தக் கூட்டமும் இன்று வெள்ளிக்கிழமை முதல் மூன்று நாட்கள் நடைபெறும். இன்று மாலை 5-30க்கு வேலக்கைப் பிள்ளையார் கோவில் மண்டபத்திலும், நாளை சனிக்கிழமை மாலை 6 மணிக்கு மருதடி விநாயகர் ஆலய மண்டபத்திலும் ஞாயிற்றுக்கிழமை மாலை 4-30க்கு மானிப்பாய் இந்துக்கல்லூரி வாசீசர் மண்டபத்திலும் இவ்விழா நடைபெறும். சங்கீத கதாப்பிரசங்கங்களும் சொற்பொழிவுகளும் ஏற்பாடாகியுள்ளன.

## மார்க்கெட் விலை வாசிகள்

### தங்கம், வெள்ளி

யாழ்ப்பாணம், வெள்ளி

| | ரூ. ச. |
|---|---|
| புடத்தங்கம் | 108 - 50 |
| நகைப்பவுன் புதிது | 100 - 00 |
| " பழையது | 96 - 00 |
| தங்கப்பவுன் | 103 - 50 |
| அரைத்தங்கப்பவுன் | 55 - 00 |
| மூஸ்வெள்ளி தோலா | 2 - 25 |

## "சைவம் வளரக் கட்டுப்பாடு அவசியம்"

—உடுப்பிட்டி எம். பி.

உடுப்பிட்டி, வியாழன்

"புத்தமத, கத்தோலிக்கமத குருமாருக்குக் குறிக்கப்பட்ட காலப் பயிற்சி அளிக்கப்படுவதால், அம் மதங்களில் பெருமளவுக்குக் கட்டுப்பாடும் ஒழுங்கும் நிலவுகிறது. அதேபோல சைவசமயக் குருமாருக்கும் பயிற்சியளிக்கப்படுதல் விரும்பத்தக்கது. அவ்வாறு பயிற்சியளித்தால் தான் சைவமதக் குருமாருக்கு சமுதாய வாழ்வில் அ[illegible]தும் மதிப்பும் ஏற்படும்."

இவ்வாறு நேற்று தெருத்தனை, கரவெட்டி கிழக்குச் சன சமூகநிலைய ஆண்டு விழாவில் தலைமை தாங்கிப் பேசிய உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரம் கூறினர்.

நடப்புவருட உத்தியோகத்தராகக் கீழ்க் காண்போர் தெரிவு செய்யப்பட்டனர்:-

தலைவர்: திரு. சி. இரத்தினம், உபதலைவர்: திரு. ஐ. கணேசன், செயலாளர்: திரு. க. சிவபாலசிங்கம், உபகாரியதரிசி: திரு. ஆ. சிவபாதம், தனதிகாரி, திரு. ஐ. இரத்தினம், போஷகர்: திரு. எம். சிவசிதம்பரம் எம். பீ.

## புனிததந்தம்

கொழும்பு, வியாழன்

சீனப் புனிததந்தம், நாளை அம்பாரையிலிருந்து கொழும்புக்கு கொண்டு வரப்படும்.

## கமிட்டிக்கு பதில் கமிஷன் நிறுவப்படும

கொழும்பு, வியாழன்

உப்பு கார்ப்பரேஷன் விவகாரங்களை ஆராய முழு அளவான கமிஷன் ஒன்று நிறுவுவதென அரசாங்கம் இப்போது தீர்மானித்திருக்கிறது. விசாரணைக் கமிட்டி ஒன்றை நிறுவ வேண்டுமென்பது அரசாங்கத்தின் முன்னைய தீர்மானமாகும்.

## நங்கலுக்கு 194 கோடி ரூபா

புதுடில்லி, ஆக. 3

பக்ரா நங்கல் அணைக்கட்டுத் திட்டத்துக்கு மத்திய அரசாங்கம் இதுவரை 194 கோடி ரூபாய் அளித்திருக்கிறது.



# மங்கையர் உலகம்



# கலைவளர்ச்சியில் பெண்கள் பங்கு

## "பரதநாட்டியத்தின் புனிதத்தன்மையை பாதுகாத்தல் அவசியம்"

பெண்கள் தங்கள் குடும்பங்களுக்கும் சேவைகள் பல செய்யலாம். சமூகத்துக்கும் அவர்கள் நற்பணிகளை ஆற்றலாம். இவையெல்லாவற்றுக்கும் மேலாகக் கலை வளர்ச்சியிலும் பெண்கள் ஈடுபட்டு உழைக்கலாம். அதுவும் பெண்கள் மிக விரும்பும் நாட்டியக் கலையைப் பயிலுவதும் அதன் அருமை பெருமைகளைப் பிறருக்கு அறியவைப்பதும் அத்துறையில் ஆர்வமுள்ள பெண்களின் கடமையாகும்.

இப்பணியைக் கலையார்வம்மிக்க ஒரு சிலரால்தான் செய்ய முடியும். பிரபல தென்னிந்திய ஆசிரியர் நாட்டியக் கலாகேசரி வழுவூர் ராமையா பிள்ளையிடம், நாட்டியம் பயின்று, இப்போது நாட்டியக் கலை வளர்ச்சியில் ஆர்வத்துடன் உழைத்துவரும் செல்வி திரிபுர சுந்தரி குமாரசுவாமியை 'ஈழநாடு' மங்கையருலகம் பேட்டி கண்ட போது அவர் அருமையான சில கருத்துக்களைத் தெரிவித்தார் அவற்றை இங்கு தருகின்றோம்.

கேள்வி: தாங்கள் நாட்டியக்கலையைத் தேர்ந்தெடுத்து அதில் பயிற்சி பெற்றதற்கு விசேஷ காரணம் எதுவும் உண்டா?

பதில்: ஆம்; சிறுவயதில் இருந்தே எனக்கு நாட்டியத்தில் பிரியம் அதிகம். என் உறவினர் ஒருவர், நான் சிறு பிராயத்தினராக இருக்கும்



பரத நாட்டியத்தில் செல்வி திரிபுரசுந்தரியின் ஒரு நிலை

போதே நடனங்கள் கற்றுக் கொடுத்தார். எனக்கு மிகுந்த ஊக்கத்தைக் கொடுத்தது பெற்றோரும், பெரியோரும் எனக்கு, நாட்டியக்கலைகளை நன்றாக வரும் என்று அடிக்கடி கூறி வந்தார்கள். இது எனக்கு உற்சாகமூட்டி எனக்கு இருந்த ஆற்றலைப் பயன்படுத்தி உதவியது. யாழ்ப்பாணத்திலுள்ள நாட்டியக் கல்லூரியில் ஆரம்பத்தில் நாட்டியம் பயின்றேன். பின்னர் விசேஷ பயிற்சிக்காக தென்னிந்தியா சென்று நாட்டியக் கலாகேசரி வழுவூர் ராமையாபிள்ளை அவர்களிடம் ஈராண்டு பயிற்சி பெற்றேன்.

கேள்வி: புகழ் வாய்ந்த நாட்டிய ஆசிரியரான ராமையா பிள்ளை அவர்களிடம் நாட்டியம் கற்றது ஒரு பாக்கியம் எனக் கருதுகிறீர்கள். அப்படித்தானே!

பதில்: ஆமாம்; சிஷ்யைக்கு குருபக்தி இல்லாமற் போய் வருமா! கலையின் மகோன்னதத்தை நன்குணர்ந்து, தன்னிடம் பயிற்சி பெறுபவர்களுக்கும் அதனைப் பயிற்றி வருபவர் என் ஆசானின் கற்பிக்கும் முறையே தனி. அத்துடன் கோயில் கோயிலாகச் சென்று அங்கெல்லாம் காணும் சிற்பங்களின் வெவ்வேறு நாம் அபிநயத் தோற்றங்களை நுணுக்கமாக ஆராய்ந்து, அவற்றையும் நாட்டியத்திற் புகுத்தி ஆபூர்வமாகக் கையாளுவார்.

கேள்வி: தெய்வ பக்திக்கும் நாட்டியக் கலைக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறதென்பதை நீங்கள் அனுபவ வாயிலாக அறிந்ததுண்டா?

பதில்: ஆமாம். இறைவன் மீது பாடப்பட்ட பாடல்களுக்குத் தான் பெரும்பாலும் அபிநயம் பிடிப்பதுண்டு. எனவே, அபிநயத்தில் வெற்றி காணும் பொருட்டு பாட்டுக்களில் அடங்கியிருக்கும் கருத்துக்களையும், தத்துவ உண்மைகளையும் கூர்ந்து கற்கிறோம். எனவே, நாட்டியக் கலையை மேலும் மேலும் பயில இறைவனின் மகத்துவத்தைப் பற்றியும் உணர்கின்றோம். இத்தகைய சந்தர்ப்பத்தை நான் பெரும் வாய்ப்பென்றே கருதுகின்றேன். நாட்டிக் கலை எனக்குத் தெய்வ பக்தியையும் தந்ததென மகிழ்ச்சியுடன் கூறுவேன்.

கேள்வி: இத்தகைய தெய்வாம்சம் வாய்ந்த கலையை நீங்கள் பிறருக்கு கற்றுக் கொடுக்க இலங்கையில் நல்ல வாய்ப்பு உண்டா!

பதில்: ஆம், வாய்ப்புக்கள் உண்டு. வசதிகள் தான் இல்லை. பல பெற்றோரும் பிள்ளைகளும் நாட்டியக் கலையில் அதிக ஆர்வம் காட்டுகிறார்கள் ஆனால், இந்த ஆர்வம் சிறந்த முறையில் உருப்பெற பல இடையூறுகள் உள. சில நடனக் கல்லூரிகள் தான் இங்குண்டு. இதனல் தூரத்திலுள்ள பிள்ளைகள் அந்த இடங்களுக்குச் சென்று நாட்டியம் பயில வேண்டியிருக்கிறது. ஆங்காங்கு பல நடனக் கல்லூரிகள் அமைத்தால் இந்தக் கஷ்டத்தைத் தீர்த்துக் கொள்ளலாம்.

கேள்வி: அப்படியானல் இலங்கையில் நடனக் கலையை விருத்தி செய்வதற்கு பல நடனக் கல்லூரிகள் நிறுவ வேண்டும் என்று சொல்கிறீர்கள்! அப்படித்தானே?

பதில்: ஆம் அத்தோடு இலங்கையில் நாட்டியக்கலைக்கென்று ஒரு பிரத்தியேகமான கலா மண்டபம் இல்லை. இத்தகைய ஒரு கலா மண்டபத்தை நிறுவுவதற்கு அரசாங்கம் உதவி செய்தால் நாட்டியக் கலை பயில்வோருக்கும் பயிற்சி அளிப்போருக்கும் பேருதவியாக இருக்கும். இந்த வசதிகள் எல்லாம் கிடைத்துவிட்டால் மட்டும் போதாது. யாவரும் கலை வளர்ச்சிக்கு ஒத்துழைக்க வேண்டும். மக்களிடையே கலையார்வத்தைப் பெருக்க வேண்டும்.

கேள்வி: 'கலைக்காகக் கலை' என்று கூறும் போது தாங்கள் எதனைக் கருதுகிறீர்கள்?

பதில்: நீங்கள் கேட்கும் கேள்விக்குப் பதில் கூற முன்னர் எம்மிடம் காணப்படும் ஒரு சில குறைகளைக் கூறித்தான் ஆகவேண்டியிருக்கின்றது. பெற்றோர் பலர் தம் பிள்ளை நாட்டியம் பயின்று எவ்வளவு விரைவில் அரங்கேற்றம் செய்ய முடியுமோ அவ்வளவு விரைவில் அரங்கேற்றம் செய்துவிட வேண்டும் என விரும்புகிறார்கள். அவ்வாறின்றிப் பிள்ளைகள் நன்கு பயின்ற பின்னரே அரங்கேற்றம் செய்ய வேண்டும். பிள்ளைகள் போதிய பயிற்சி பெறும் வரை பெற்றோர் பொறுத்திருக்க வேண்டும். அரங்கேற்றதுக்காகமட்டும் நாட்டியக் கலை பயில்வதில்லை. நாட்டியக் கலையில் எத்தனையோ ஆராய்ச்சிக்கு இடமுண்டு. அத்திவாரம் செம்மையாக அமைந்தால் தான் மேலும் ஆராய்ச்சிக்கு இடமுண்டு. இதைத் தான் 'கலைக்காகக் கலை' என்று குறிப்பிட்டேன்.

கேள்வி: நாட்டியம் பயில முன்வருவோர் வேறு எதை உளத்திற்கொள்ள வேண்டும்?

பதில்: அடிக்கடி நாட்டிய ஆசிரியர்களை மாற்றிக் கொள்வது நாட்டியக் கலைக்குப் பொருத்தமற்ற தொன்றாகும். ஆசிரியருக்கு ஆசிரியர் நட்டுவாங்கம், பாவம் ஆகியவை வேறுபடுத்துவதுண்டு. பிள்ளைகள் ஆசிரியர்களை மாற்றிக் கொள்வது பிள்ளைகளுக்கும் கஷ்டமாக இருக்கும். ஆசிரியர்களுக்கும் இது மிகுந்த சிரமத்தைக் கொடுக்கும்.

கேள்வி: பரதநாட்டியம் பயின்றோர் சினிமாவில் நடனம் ஆடுவது பற்றித் தங்கள் கருத்தென்ன?

பதில்: பரதநாட்டியம் பயின்றோர், அக்கலையுடன் மற்றைய நாட்டியங்களைக் கலக்காதவரை, சினிமாவில் தாராளமாகப் பங்கு கொள்ளலாம். ஆனல் பெரும்பாலும், பரத நாட்டியத்துடன், வேறு நடன முறைகளையும் சிலர் 'கலப்படம்' செய்வதால் பரத நாட்டியத்தின் புனிதத் தன்மை குறைந்து விடுகின்றதென்பதே பலரின் கருத்து.

* * *

ஒரு மணி நேரம் செல்வி திரிபுர சுந்தரி குமாரசுவாமியுடன் பேசிக்கொண்டிருந்தோம். நேரம் போனதே தெரியவில்லை. சிறுபராயத்தில் பெற்றோர் பிள்ளைகளுக்கு அளிக்கும் வாய்ப்புக்களும் உற்சாகமும் அவர்களின் எதிர்காலத்தை சிறப்புறச் செய்துவிடுகின்றதெனபதற்கு இவருக்குக் கலைவளர்ச்சியில் உள்ள ஆர்வமும், ஈடுபாடும் சிறந்த ஓர் உதாரணம் என்று கூறினல் அதுமிகையாகாது.

# பாயசத்துக்கு சேமியா

## பெண்களுக்கேற்ற குடிசைகைத்தொழில்

—"ரோகிணி"—

சேமியா, சவ்வரிசி போன்ற பொருள்களை மக்கள் விரும்பி உபயோகிக்கின்றனர். பாயாசமும், தின்பண்டங்களும் செய்ய அதிகமாக உபயோகமாகின்றது. யாராவது ஒரு பொருளாதார நிபுணர் இப்பொருள்கள் தம்பகுதியில் எவ்வளவு விற்பனையாகின்றது என்று மதிப்பிட்டுக் கொடுத்தால் பயனுண்டு எனறு நினைக்கிறேன்

இப்பொருட்களை குடிசைக் கைத்தொழிலாகவோ, அல்லது சிறு தொழிற்சாலையை நிறுவியோ செய்வது மிக என்து.

இதனைச் செய்வதற்கு வேண்டியது மாப்பொருளே. (Starch). இது நம்மிடம் எவ்வளவு உள்ளது. குறைவாயிருந்தால் இதனின் உற்பத்தியைக் கூட்டுவதற்கு வழிவகைகள் உள்ளனவா என்பவை நிபுணர்களாலும் பொது மக்களாலும் ஆராயப்படல் வேண்டும்.

இப்போது வெளிநாட்டிலிருந்து இறக்குமதியாகும் கோதுமை மாவையே உபயோகிக்கலாம். இது உண்மையில் கோதுமை மாவல்ல. சோளம் போன்ற தானிய வகைகளின் மாவேயாகும். நமது பொருள்கள் உணவுச் சத்துக் கூடியதாக இருக்க வேண்டும் என்று விரும்பினல் மரவள்ளிமா தேவையான அளவு உற்பத்தி செய்ய வழிவகைகள் ஆராயப்படுதல் நல்லது.

இப்பொருள்களைச் செய்யக் கூடிய சிறு யந்திரத்தின் விலை ரூபாய் ஐம்பதுக்கும் குறைந்தது. கையால் இயக்கக்கூடியது. ஒரே இயந்திரத்தின் உதவியுடன் பலவித தோற்றங்களை உடைய பொருள்களை உண்டாக்கலாம். அனேகவித நாமங்களைக் கொண்டுள்ள இத்தகைய பொருள்களிலுள்ள வேறுபாடு உருவத்தில்தான் அடிப்படையில் எல்லாப் பொருள்களும் கிட்டத்தட்ட ஒன்றே.

இடியப்பம் பிழிந்து பழகியுள்ள எங்கள் பெண்களுக்கு மாவைக் குழைக்கும் பதமும், பிழியும் முறையையும் ஒருவரும் சொல்லிக் கொடுக்க வேண்டியதில்லை. பிழியப்பட்ட நூலிழைகளை பாய்களில் உலர்த்தி, பின்னர் பொடியாக்கி அழகிய அட்டைப் பெட்டிகளில் அடைத்து விற்பனை செய்யக்கூடிய திறமைபடைத்த மக்கள் நம் நாட்டில் இல்லையா?

நமது சுயதேவையை மிகச் சுலபமாகப் பூர்த்தி செய்து கொள்ளலாம். இலங்கையின் மற்றப் பகுதிகளுக்கும் அனுப்பலாம்.

வேறு ஒரு முறையிலும் இத்தொழில் பரவலாம். நமது பகுதியிலுள்ள பெரிய உணவு விடுதிகளில் அதிக அளவில் தினமும் இடியப்பம் பிழியப்படுகின்றது. இதற்கும் இது போன்ற இயந்திரத்தை உபயோகிக்கலாம். வேலையும் துரிதப்படும். சம்பளமும் மிச்சமாகும்.

இத்தகைய பெரிய உணவு விடுதிகள் ஒன்றே. சேமியா, மக்ரோனி, நூடில்ஸ் போன்றவற்றை உபதொழிலாகத் தயாரிப்பதில் முனைவது மிக எளிது. இத்தொழிலில் ஈடுபட்டிருப்போரே தினமும் பெரும் அளவில் மாவை உபயோகிக்கின்றார்கள்.

இது சிறு தொழில்தான். ஆனல் சிறுதுளிதான் பெரு வெள்ளமாகின்றது.

## மீண்ட செல்வம்

வீட்டிலே தனது மைந்தனை விட்டுவிட்டுத் தன் விடுமுறையைக் கழிக்க வெளியிடம் சென்றார் பெண்மணி ஒருவர் தனியே விடப்பட்ட பையன் தனது தாய் திரும்பும்போது அதிசயிக்கக் கூடிய விதத்தில் ஏதாவது செய்து வைக்க வேண்டும் என்று விரும்பினன். சற்று நேரம் யோசித்தான். அவனுக்கோர் எண்ணம் உதித்தது. அம்மா தன்னைப் பெரிதாகப் புகழுவாரே என்ற ஆசையில் வீட்டில் உள்ள மூலைமுடுக்குகள் எல்லாவற்றையும் துடைத்துச் சுத்தம் செய்தான். மூலை ஒன்றிலே துருப்பிடித்துக்கிடந்த

(8ம் பக்கம் பார்க்க)

தெய்வ வழிபாட்டிற்கும்
உங்கள் இல்லங்களில் நறுமணம் கமழ்வதற்கும்
33
303 ஊதுபத்திகளை
3003
உபயோகியுங்கள்.
யாழ்ப்பாணத்தில் ஸ்டாக்கிஸ்டுகள் தேவை.
தயாரிப்பவர்கள்:
எஸ். வி. முருகேசன் அன் சன்ஸ்,
பெங்களூர்-2.
சோல் ஏஜண்டுகள்:
ஜெகஜோதி அன் கோ.
குருநெனிய.

# யாழ்ப்பாணம் வண்ணை வைத்தீஸ்வர கோவில்

## தேவி மகோற்சவம்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் திருவண்ணை நகர் ஸ்ரீவாலாம்பிகா சமேத ஸ்ரீவைத்தீஸ்வர கோவில் தேவி மகோற்சவம் இன்று ஆரம்பமாகி 16 8-61 புதன்கிழமை முடிவடையும்.

4-8-61 வெள்ளிக்கிழமை பகல் 10-15 மணிக்கு கன்னி லக்கினத்தில் மஹாதுவஜாரோகணம், அன்றிரவு மகா யாகாரம்பமும் நவசத்தி ஆவாகனமும். 5-8-61 சனிக்கிழமை இரவு பூதவாகனம். 6-8-61 ஞாயிற்றுக்கிழமை இரவு அன்ன வாகனம். 7-8-61 திங்கட்கிழமை இரவு யானை வாகனம். 8-8-61 செவ்வாய்க்கிழமை இரவு விருஷப வாகனத்துடன் பெரிய சப்பரம், 9-8-61 புதன்கிழமை இரவு புஷ்பப் பல்லக்கு. 10-8-61 வியாழக்கிழமை இரவு நாக வாகனம். 11-8-61 வெள்ளிக்கிழமை குதிரை வாகனம். 12-8-61 சனிக்கிழமை பகல் 11 மணிக்கு வசந்தமண்டமப்பூசை ஆரம்பித்துப் பகல் 12-00 மணிக்கு துலாலக்கினத்தில் ரதாரோகணம். அன்றிரவு ரதாரோகணப் பிராயச்சித்தம் உள் வீதிவலம். 13-8-61 ஞாயிறு பகல் 12-00 மணிக்கு தீர்த்தோற்சவம், பின் யாகஉத்வாசனமும் கும்ப அபிஷேகமும், இரவு துவஜஅவரோகணமும், நவசத்தி விசர்ச்சனமும். 14-8-61 திங்கட்கிழமை இரவு திருவூஞ்சல். 16-8-61 புதன்கிழமை காலை உற்சவப் பிராயச்சித்தாபிஷேகம்.

தேர், தீர்த்தோற்சவம் தவிர்ந்த மற்றைய நாட்களில் பகல் உள்வீதிவலம்வரும். உற்சவ காலங்களில் தினந்தோறும் காலை 7-30 மணிக்கு காலசந்திப்பூஜை, 9 மணிக்கு வசந்த மண்டபப் பூஜை. மாலை 4-00 மணிக்கு சாயரட்சைப்பூஜை, 5-00 மணிக்கு இரண்டாங் காலப்பூஜை. இரவு 7-30மணிக்கு வசந்த மண்டபப்பூஜை. 10-00 மணிக்கு அர்த்தசாமப் பூஜை.

# உணவுப்பொருள் விலை உயர்வு; தோட்டத்தொழிலாளர் அதிருப்தி

நாவலப்பிட்டி, புதன்

"உணவுப்பொருள்களின் விலை உயர்வினால் தோட்டத் தொழிலாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். தோட்டத் தொழிலாளர்களின் முக்கிய உணவு மா. மாவினால் தயாரிக்கப்படும் பாண் முதலான உணவுப் பண்டங்களின் விலையும் அதிகரித்துள்ளன. மக்களின் நாளாந்தப் பாவனையில் உள்ள பொருள்களை உயர்த்தியதால் தொழிலாளர் அதிருப்தி அடைந்துள்ளனர்."

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் நாவலப்பிட்டி ஜில்லாக் கமிட்டித் தலைவர் திரு. கே. சுப்பையா தொளஸ்பாகையிலுள்ள மினுக்கொல்லை தோட்டத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றிற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினர்.

திரு. கே. சுப்பையா மேலும் கூறியதாவது:-

தொழிலாளர் வர்க்கம் ஐக்கியமாக ஒன்றுபட்டால்தான் நாட்டின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணமுடியும். பிரஜா உரிமைப் பிரச்சினையை தட்டிக் கழித்து வருகின்றனர். இப்பிரச்சினைக்கு தீர்வுகாணப்படாததால் தொழிலாளர் வர்க்கம் திரிசங்கு சுவர்க்க நிலையில் உள்ளது.

இக்கூட்டத்தில் திரு. டி. ஜி. பீலிக்ஸ், திரு. ஏ. வி. சந்தனம், திரு. என். எஸ். இராஜசுந்தரம் ஆகியோரும் பேசினர்.

## மலாயா சமூக சேவை குழு இலங்கை வரும்

கொழும்பு, புதன்

மலாயா சமஷ்டி அரசாங்கம் 17 பெண் தொண்டர்கள் கொண்ட குழு ஒன்றையும் சமூக நல சேவை ஜிலாகாவில் கடமையாற்றும் ஒரு பெண் உத்தியோகஸ்தரையும் இலங்கைக்கு அனுப்பிவைக்கும்.

ஆகஸ்ட் மாதத்தில் இங்கு வரும் இவர்கள் 15 நாட்கள் வரை இங்கு தங்கியிருப்பார்கள் எனத் தெரிகிறது.


# மொணரு அன் ரோஸ் பப்படங்கள்

நாவிற்கு ருசியுடன் கைதேர்ந்த தொழிலாளர்களைக் கொண்டு
தனிஉளுந்தில் சுகாதார முறைப்படி தயார் செய்யப்படுவது

மொணரு பப்படம் — MONARA PAPPADAM — TRADE MARK 10500

மொணரு
அன்
ரோஸ்
பப்படங்கள்
மூவர்ண கலர்
லேபிளுடன்
மயில் - ரோஸ்
அடையாள மிட்டு

ROSE FLOWER BRAND BEST PAPPADAM — REGD. TRADE MARK No. 18255 — A. M. BUHARI. 255, 5TH CROSS ST., COLOMBO.

இலங்கையில் எல்லா இடங்களிலும் விற்பனையாகிறது.

தயாரிப்பவர்கள்:

ஏ. எம். புகாரி அன் கோ

99, நாலாம் குறுக்குத் தெரு,
கொழும்பு.



10,000,000
மக்களும் விரும்பி
வாங்குவன!

இலங்கை முழுவதும்
புகழ் பரப்புவன!

எவை?

டொலர் பவுண் அடையாளம் உள்ள

ALUMINIUM INDUSTRIES (CEYLON) LTD. — ONE DOLLAR — DOLLAR BRAND

அலுமினியப் பாத்திரங்களே!
ஏன்?

டொலர் அலுமினியம் மாற்று உயர்ந்தது சுத்தம் உள்ளது!
டொலர் அலுமினியம் அழகு அமைப்பு கண்கவர்ச்சி உள்ளது!!
டொலர் அலுமினியம் உறுதி உழைப்பு உத்தரவாதம் உள்ளது!!!

எல்லாவற்றிற்கும் மேல்

உங்கள் தாய் பொன்னுட்டில் மாவிட்டபுரத்தில்
நவீன முறையில் செய்யப்படுவது !

டொலர் பவுணை பார்த்து வாங்குங்கள்
எங்கும் கிடைக்கும்

டொலர் மாத்திரமே உத்தரவாதமானது!

தயாரிக்குமிடம்:

அலுமினியம் இன்டஸ்ரீஸ் லிமிட்டெட்,
மாவிட்டபுரம், யாழ்ப்பாணம்.


## வள்ளுவர் இல்லம் வெற்றியீட்டியது

யாழ்ப்பாணம், வெள்ளி

நல்லூர் சாதனைபாடசாலையின் வருடாந்த விளையாட்டுப் போட்டிகள், அண்மையில் ஆசிரியகலாசாலை அதிபர் திரு. ஜே. ஜி. அரசரெத்தினம் தலைமையில் மிக அமைதியான முறையில் நடைபெற்றன.

வள்ளுவர், பாரதி, காந்தி ஆகிய இல்லங்களுக்கிடையே நடைபெற்ற பலத்த போட்டியில், வள்ளுவர் இல்லம் 153 புள்ளிகள் பெற்று வெற்றியீட்டியது.

பாடசாலை பெற்றோர் ஆசிரிய சங்கச் செயலாளர் திரு. மு. கனகரெத்தினம் வெற்றிபெற்றோருக்கு பரிசுகளை வழங்கினர்.

## சனசமூக நிலைய கலைக் கண்காட்சி

யாழ்ப்பாணம், வியாழன்

அரியாலை சனசமூக நிலையம் செப்டம்பர் மாதத்தில் ஓர்கலைக் கண்காட்சியை நடத்தவிருக்கிறது.

இக்கலைக்கண்காட்சி சம்பந்தமாக சித்திரப் போட்டியொன்றையும் நடாத்த இந்நிலையம் முடிவு செய்திருக்கிறது. இச் சித்திரப் போட்டியில் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு சனசமூக நிலையத்தையும் பங்குபற்றுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு சனசமூக நிலையமும் இயற்கைக் காட்சிச் சித்திரம், ஓர் பெரியாரின் முகச் சித்திரம் ஆக இரண்டு சித்திரங்களை இச் சித்திரப்போட்டிக்கு அனுப்பிவைக்க வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

## போஸ்ட்மாஸ்டர் சங்க கிளைக் கூட்டம்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் போஸ்ட்மாஸ்டர்கள் சங்கத்தின் வருடாந்த மாநாடு இம்மாதம் 13-ம் திகதி யாழ்ப்பாணம் மாநகரசபை மண்டபத்தில் நடைபெறுமெனத் தெரிகிறது. இதற்கான ஏற்பாடுகளைச் செய்வதில் இச் சங்கத்தின் செயற்குழுவினர் ஈடுபட்டுள்ளனர்.

## வானொலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**வெள்ளி 4-8-61**

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நிகழ்ச்சி, 7-15 காலைக் கதிர், 7-30 திரைஇசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 கே. துரைராஜா - பாட்டு, 6-15 கிராமசஞ்சிகை, 6-45 புல்லாங்குழலும் கோட்டு வாத்தியமும்.

இரவு 7-00 ஞானஅஞ்சலி, 7-30 நேயர் விருப்பம், 8-00 இஸ்லாமிய நிகழ்ச்சி, 9-15 விமர்சனங்கள், 9-30 எம். ஆர். கோவிந்தராஜா-பாட்டு, 10-15 தேர்ந்தஇசை.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15 பகல் 2, இரவு 7-15)

காலை 6-45 மங்களஇசை, 6-50 துதிப்பாடல், 7-00 வாத்தியஇசை, 7-30 வலங்கைமான் எஸ். ஏ. சௌந்தரராஜன் - நாகஸ்வரம்.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 12-30 நடுத்தரப்பள்ளிகளுக்கு, 1-00 மாதர் நிகழ்ச்சி, 1-30 வாத்தியஇசை, 1-50 குரலிசை, 2-10 உயர்தரப்பள்ளிகளுக்கு.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடகசங்கீதம்), 5-45 காலட்சேப கதை, 6-15 கிராமநிகழ்ச்சிகள்.

இரவு 7 30 எம். எம். தண்டபாணி தேசிகர் -பாட்டு, 9-15 பலகணி, 9-30 புதுமலர் : மெல்லிசைப் பாடல்கள், 9-45 இசைமாலை.

## ஊரெழு பொக்கணை நீரூற்று

### காரியாதிகாரி யோசனை

நீர்வேலி, வெள்ளி

"ஊரெழுவிலுள்ள பொக்கணை நீரூற்றின் உதவியுடன் இப்பகுதியில் பரந்துகிடக்கும் தரிசு நிலங்களை நல்ல பொன்கொழிக்கும் பூமியாக மாற்றி நமது நாட்டின் பொருளாதாரத்தை வளம்படுத்த இங்குள்ள ஒவ்வொருவரும் முன்வர வேண்டும். இப்பகுதியிலுள்ள பல பெரியார்களின் சேவையால் இச்சங்கம் சிறந்த முறையில் வளர்ச்சியடைந்து வருவதைப் பாராட்டுகிறேன்."

இவ்வாறு ஊரெழு கிராம முன்னேற்றச் சங்கத்தின் வருடாந்தக் கூட்டத்திற்குத் தலைமைவகித்துப் பேசிய வலிகாமம் கிழக்கு காரியாதிகாரி திரு. ஜே. ரி. சபாபதிப்பிள்ளை கூறினர்.

பின்னர் நடைபெற்ற புது வருட உத்தியோகத்தர் தெரிவின்போது 15 பேர் கொண்ட நிருவாகசபையொன்றும் அமைக்கப்பட்டது.

## சில்லாலை தேவாலய உற்சவம்

பண்டத்தரிப்பு, வெள்ளி

சில்லாலை சென். மேரிஸ் தேவாலய வருடாந்த உற்சவ கொடியேற்றவிழா இம்மாதம் முதலாம் திகதி நடைபெற்றது. வவனியா கட்டளைக் குரவர் வண. பிதா ஜோன் சிங்கராயர் கொடியேற்றி வைத்தார். இம்மாதம் 15-ந் திகதி பெரியபாடற் பூசையுடனும் திருச் சுருபச்சுற்றுப் பிரகாரத்துடனும் உற்சவம் முடிவடையும்.

மகத்தான **4** -வது வாரம்!

**கிங்ஸ்லி** (கொழும்பு) **பிளாஸா** (வெள்ளவத்தை) **வெம்பிளி** (கண்டி)

**நவா** (கொம்பனித்தெரு) **மொடர்ன்** (பதுளை) **விஜிதா** (மஸ்கேலியா)

**ஜெமினி கணேசன், பத்மினி**
**கே. ஏ. தங்கவேலு, மனோரமா**
**எஸ். நடராஜன்**

மற்றும் பலர் நடித்த



மதுரம் பிக்சர்ஸ்

# மீண்ட சொர்கம்

கதை, வசனம், டைரக்ஷன்
ஸ்ரீதர்

பின்னணி: ஏ. எம். ராஜா, சீர்காழி கோவிந்தராஜன், ஜிக்கி, எம்.எல். வசந்தகுமாரி

மக்கள் கண்குளிர, இதயம் மகிழ, கலையும், பண்பும் இணைக்கப்பட்ட அருமையான அமைப்பு

**இன்று முதல் குதூகல ஆரம்பம்!**

**வெலிங்டன்** (யாழ்ப்பாணம்) தினசரி மாலை 6-30க்கும் இரவு 9-30மணிக்கும்
சனி, ஞாயிறு 4 காட்சிகள்

ஜெமினி கணேசன், பத்மினி, தங்கவேலு மற்றும் பலர் நடித்த

# மீண்ட சொர்கம்

**மனோஹரா** (யாழ்ப்பாணம்) தினசரி மாலை 6-30, இரவு 9-30 மணிக்கும்

ஜெமினி கணேசன் - பி. சரோஜாதேவி
நடித்த

# வாழ வைத்த தெய்வம்

இப்பொழுது திரையிடப்படுகிறது!

**ராணி சினிமா** (யாழ்ப்பாணம்) பி. ப. 2 மணி, மாலை 6-00மணி 9-45 மணிக்கும்

புரட்சி நடிகர் **எம். ஜி. ஆர்.**
கன்னடத்துப்பைங்கிளி **சரோஜாதேவி**
நடித்த

# திருடாதே!

தென்னிந்தியாவிலும் மற்றும் பல இடங்களிலும் அதிவெற்றி வாகை சூடிக்கொண்டிருக்கும் மகோன்னத தயாரிப்பு!


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி, 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1961-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 4-ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# எம். பி. பேச்சுக்கு கூட்டத்தில் ஆட்சேபம்

முல்கிறிகல, வியாழன்

பெலியட்ட என்னுமிடத்தில் நிறுவப்படவிருந்த மத்திய கல்லூரி, தங்காலைக்கு மாற்றப்படுவதை ஆட்சேபித்து, பெலியட்ட சந்தை மைதானத்தில் ஒரு கூட்டம் நடைபெற்றது. அப்போது அங்கு நடைபெற்றுக் கொண்டிருந்த அக்கூட்டத்தின் ஒரு பகுதி, பெலியட்ட எம்.பி. திரு. ராஜபக்ஷாவின் பேச்சு அரசாங்க கொள்கை பற்றிய அரசியற் பேச்சு எனக்கூறி ஆட்சேபித்தது.

மக்கள் கூட்டத்திலிருந்து வந்த திரு. புஞ்சிகெவ, அக்கூட்டம் மத்திய கல்லூரியைப் பற்றி ஆராய்வதற்காகவே கூட்டப்பட்டது என்றார்.

இதைத் தொடர்ந்து, கூட்டத்தில் வன்மையான வார்த்தைகள் எழுந்தன. சிலர் கூட்டத்தைவிட்டே வெளியேறினர்.

திரு. ராஜபக்ஷா தொடர்ந்து பேசுகையில் தங்காலையும், பெலியட்டவும் ஒரே தொகுதியில்தான் இருக்கிறதென்றும் அதனால் இருநகரங்களையும்பாரபட்சமின்றியே நடாத்தவேண்டும் எனவும் குறிப்பிட்டார். அவர் மேலும் தொடர்ந்து பேசியதாவது:-

"தங்காலையில் அநேக பாடசாலைகள் இருப்பினும் ஒரு பாடசாலையிலாவது எச். எஸ். சி. வகுப்பு இல்லை. இதன் காரணத்தினால் தங்காலை மாணவர்களின் வசதிகளுக்காக உயர்தர வகுப்புக்களை ஏற்படுத்தும்படி கல்விமந்திரியைக் கேட்டுள்ளேன். தங்காலையில் ஒரு மத்திய கல்லூரி நிறுவப்படும் என்ற செய்தி ஆதாரமற்றது.

அடுத்த வருடத்தில் பெலியட்ட சிரேஷ்ட பாடசாலையில் ரூ. 50,000 செலவில் விஞ்ஞான ஆய்கூடம் ஒன்று திறக்கப் படவிருக்கின்றது.

## டெலிபோன் மூலம் சமையல் திட்டம்

லண்டன், ஆகஸ்ட் 3

இன்று என்ன சமையலைச் செய்யலாம்? என்று பேர்மிங்காமிலுள்ள இல்லத்தரசிகள், இனிமேல் சிந்தித்துக்கொண்டிருக்கத் தேவையில்லை. டெலிபோனில் ஏ. எஸ். கே. 8071 என்ற எண்ணைச் சுழற்றினால் போதும், அன்றைய பருவநிலைக்கேற்றதும், சுவையானதுமான துணை உணவுகளைத் தயாரிப்பதுபற்றி இரண்டு குறிப்புக்கள் கிடைத்துவிடும். இந்தச் சமையல் குறிப்புக்களை பிரிட்டிஷ் விளைபொருள் சபை தயாரிதுள்ளது. அதை மக்களுக்குத் தரும் பொறுப்பை டெலிபோன் நிர்வாகம் ஏற்றுக்கொண்டிருக்கிறது.

இது தவிர, பிரிட்டிஷ் அஞ்சல்துறை டெலிபோன் மூலம் நேரம் கூறவும், வானிலைத் தகவல்களை வழங்கவும், கிரிக்கெட் பந்தயங்கள் அல்லது வேறு பந்தயங்கள் நடைபெறும்போது அவ்வப்போது முடிவுகளைத் தெரிவிக்கவும் ஏற்பாடு செய்திருக்கிறது. வெளிநாடுகளிலிருந்து வருகிறவர்களுக்கு ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மன, ஸ்பானிஷ் மொழிகளில் டெலிபோன் மூலம் தகவல்களையும் ஆலோசனைகளையும் தெரிவிக்கிறது.

## இராணுவக் கோஷ்டி வெற்றி

மாவிட்டபுரம், வெள்ளி

யாழ்ப்பாணத்திலுள்ள இராணுவத்தினருக்கும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கும் இடையில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் இராணுவத்தினர் 2-0 கோல்களால் வெற்றியீட்டினர்.

இவர்கள் இரு கோல்களையும் இடைவேளைக்கு முன்னர் அடித்துவிட்டார்கள். திரு. வி. தியாகராசா மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

## ஆறுயிரம் வீடுகள் ஸ்தலஸ்தாபன சபைகள் அமைக்கும்

கொழும்பு, வியாழன்

ஆறுயிரம் வீடுகள் கட்டுவதற்காக ஸ்தலஸ்தாபன சபைகளுக்கு, ஸ்தலஸ்தாபன வீடமைப்பு அமைச்சர் பணம் கொடுக்க உத்தேசித்துள்ளார்.

இத்திட்டத்தின் முதல் கட்டத்துக்கு முப்பது இலட்சம் ரூபாய் ஒதுக்கும்படி அரசாங்கத்திடம் அமைச்சர் கோரியுள்ளார்.

கொழும்பு, கண்டி மாநகர சபை பகுதியில் ஒவ்வொரு பகுதியிலும் 200 வீடுகளும் நுவரெலியா, நீர்கொழும்பு, குருநாகலை, யாழ்ப்பாணம், காலி ஆகிய பகுதிகளில் ஒவ்வொரு பகுதியிலும் 509 வீடுகளும் அறுபது நகரசபைகள், பட்டின சபைகள் பகுதியில் ஒவ்வொரு பகுதியிலும் இருபது வீடுகளும் அமைக்கப்படும்.

முன்னூற்று ஐம்பது கிராமச் சங்கப் பகுதிகளில் ஒவ்வொரு பகுதியிலும் பத்து வீடுகள் அமைக்கப்படும்.

அதிக வருமானமுள்ளவர்களுக்கான 400 வீடுகளும் மாநகரசபைகள் கட்டவேண்டுமென்றும் அமைச்சர் சிபார்சு செய்துள்ளார்.

## இளம் விவசாயிகள் கோஷ்டி வெற்றி

மாவிட்டபுரம், வெள்ளி

மாவிட்டபுரம் இளம் விவசாயிகள் 2-ம் பிரிவு கோஷ்டிக்கும் வீமன்காமன் யங்ஸ்டார்கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் மாவிட்டபுரம் இளம் விவசாயிகள் கோஷ்டியைச் சேர்ந்த ச. செல்வராசா 2 கோல்களை அடித்து இளம்விவசாயிகள் கோஷ்டிக்கு வெற்றியை ஈட்டிக் கொடுத்தார்.

## மங்கையர் உலகம்:

### மீண்ட செல்வம்

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

தகரப் பெட்டி ஒன்றையும் திறந்துகூடப் பாராமலே அழுக்குக் கூடைக்குள் போட்டுவிட்டான்.

விடுமுறை முடிந்ததும் தாய் வீடு திரும்பினர். சுத்தமாக அழகுடன் விளங்கிய வீட்டைக் கண்டதும் அவளுக்கு ஒரே ஆனந்தம். எல்லா இடங்களையும் சென்று பார்த்தாள். குப்பை, தூசி ஒன்றுமே இருக்கவில்லை. மைந்தனைப் புகழ்ந்தபடியே சென்றவளுக்கு என்ன தோன்றிற்றோ, திடீரென்று ஓடிச் சென்று மூலை ஒன்றைப் பார்த்தாள். அவளுக்குப் பகீர் என்றது! எல்லா இடமும் தேடலாயிற்று. அந்தத் தகரப்பெட்டி மட்டும் கிடைக்கவில்லை. தன்னிடம் உள்ள அத்தனை சொத்தையும் அல்லவா அதற்குள் வைத்திருந்தாள். 3,500 ரூபாய் பெறுமதியான நகையையும் பணத்தையும் கூட அப்புறப்படுத்திய சங்கதியை யாவும் அவன் எப்படி அறிவான்!

உண்மையை அறிந்த தாய் சுகாதார பரிசோதகரிடம் ஓடினாள். அவரது உதவியுடன் இச்சம்பவம் நிகழ்ந்த தினம், பட்டினத்தைச் சுத்தி செய்தோரைக் கண்டுபிடித்துவிட்டாள். தீவிர விசாரணை நடந்தது. அவள் எடுத்த முயற்சி வீண்போகவில்லை. மறைந்த புதையல் மீண்டும் வந்து சேர்ந்தது.

# வெளிநாட்டு படங்கள் பற்றி ஆராய கமிஷன்

## மந்திரி யோசனைக்கு அரசாங்கம் ஆதரவு

கொழும்பு வியாழன்

எல்லா வெளிநாட்டு சினிமாப் படங்களின் இறக்குமதி, விநியோகம் ஆகியவற்றையும் அரசாங்கம் கையாள வேண்டுமா என்பதுபற்றி ஆராய ஒரு கமிஷன் நியமிக்க வேண்டுமென்ற உள்நாட்டு மந்திரியின் யோசனைக்கு அரசாங்கம் இணங்கியுள்ளது.

இந்தியாவில் சிங்களப் படங்களை உற்பத்தி செய்வதையும், இந்தியப் படங்களைச் சிங்களத்தில் "டப்" செய்வதையும் தடுக்க வேண்டுமென்பதும் உள்நாட்டு மந்திரியின் நோக்கமாகும்.

## ஏழைகள்மீது வரிச்சுமை!

ருவன்வெல, வியாழன்

பண நெருக்கடி ஏற்படுந்தறுவாயில் நமது நாடு இன்று நிற்கிறது. 1961-ம் ஆண்டு வரவு செலவுத் திட்டம் ஏழைகள் மீதும், நடுத்தர வகுப்பினர் மீதும், பெருஞ்சுமையை ஏற்று விட்டது.

இவ்வாறு ருவன்வெல எம். பி. திரு. பி. சி. இம்புலான ஒரு கூட்டத்திற் பேசும் போது குறிப்பிட்டார்.

நாளாந்தச் செலவுகளினால் சாதாரண மனிதன் படும் கஷ்டங்களை முதலாளிகள் ஒருபோதும் உணருவதில்லை. எனவே மக்கள் வெகு ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

## 10 லட்சம் யாத்ரீகர்கள் விஜயம் செய்தனர்

ஆக்ரா, ஆகஸ்ட் 3

சென்ற வருடம் 10 லட்சம் யாத்ரீகர்களுக்கு மேல் தாஸ் மஹாலுக்கு விஜயம் செய்தனர் என்று அதிகாரபூர்வமாக அறிவிக்கப்படுகிறது.

இவர்களில் லட்சம் பேர் அந்நிய நாடுகளைச் சேர்ந்த யாத்ரீகர்கள். ராஜ்ய, மத்திய அரசாங்கங்களால் ஏற்பாடு செய்யப்பட்ட யாத்ரீகர் கோஷ்டிகளில் சுமார் 2 லட்சம் பேர் வந்திருந்தனர்.

## நாய்சுடுபவர்கள் உஷார்!

அம்பாரை, வியாழன்

'வீதிகளில் அலையும் நாய்களின் எண்ணிக்கை, தினந்தோறும் அதிகரித்துக்கொண்டு வருவதால், கிராமங்கள் தோறும் நாய் சுடுபவர்களை அதிகாரிகள் நியமிக்க வேண்டும்' இந்தக் கிராமத்தில் அதிகாரிகள் நாய் சுடுபவர்களை இதுவரை நியமிக்கவில்லை. இதனால் நாய்களின் எண்ணிக்கை நாள் தோறும் பெருகிவருகிறது" என்று விசர்நாய் கடித்து மரணமான ஒருவரின் மரணவிசாரணையின் போது திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். ஈ. அழகையா குறிப்பிட்டார்.